# உதயன்

சுடர் : 36 கதிர் : 126 | வியாழக்கிழமை | பங்குனி 19 ஆம் நாள் 01 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## யாழின் தலைவிதி 2ஆவது பி.சி.ஆரில்

### மருத்துவ கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

சுமார் ஆயிரத்து 500 பேரினதும் இரண்டாவது பி.சி.ஆர். முடிவுகளை வைத்துத்தான் யாழ்ப்பாணம் நகரப் பகுதியினதும் இதர பகுதிகளினதும் கொரோனா நிலைமை தொடர்பில் தீர்மானிக்கப்படும். இதனை வைத்தே இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார். 19

## தேவையற்ற ஒன்றுகூடல் வேண்டவே வேண்டாம்!

### மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 1

கொரோனாப் பெருந்தொற்று மேலும் மேலும் ஆபத்தானதாக மாறுவதற்குரிய சந்தர்ப்பங்கள் உள்ள நிலையில், மக்கள் பண்டிகைக் காலங்களில் தேவையற்ற ரீதியில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்க 19

## தேவாலயங்கள், ஹொட்டல்களுக்கு இன்று முதல் விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 1

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு இலங்கையில் உள்ள பிரதான கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா ஹொட்டல்களுக்கு இன்று முதல் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் 19

## 46 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு

மன்னார், ஏப். 1

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 46 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

பேசாலை 4ஆம் வட்டாரத்தில் இருந்தே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டு வீரசிங்கவின் பணிப்பில், பேசாலை 19

## மருதனார்மடம் சந்தை வியாபாரிக்கு எழுமாற்றுச் சோதனையில் தொற்று!

யாழ்ப்பாணம், ஏப்.1

மருதனார்மடம் பொதுச்சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிக்கு கொரோனாத் தொற்றுள்ளமை எழுமாற்றுச் சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணத்தில் 38 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் இருவர் 19

## யாழ்ப்பாணத்தில் மேலும் 38 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ்ப்பாணத்தில் மேலும் 38 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 19

## ஜேர்மனிலிருந்து நாடு கடத்தப்பட்டனர் 31 இலங்கையர்

கொழும்பு, ஏப். 1

ஜேர்மனில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 புகலிடக் கோரிக்கையாளர்கள் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ஜேர்மன் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 100 தமிழ் புகலிடக் கோரிக்கை 19



## வட்டுக்கோட்டையில் ஹெரோய்ன் மீட்பு!

### சந்தேகநபருக்கு விளக்கமறியல் இன்னொருவர் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 1

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்னை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 20

## கொரோனாவால் பெண் பலி; சோகத்தில் கணவனும் சாவு

### நயினாதீவில் துயரம்

யாழ்ப்பாணம், ஏப். 1

கொரோனாத் தொற்றால், உயிரிழந்த மனைவியின் முகத்தை இறுதி நேரத்தில் பார்க்க முடியாது போன சோகத்தில், மனைவி இறந்து 13 நாள்களில், அவரின் கணவரும் உயிரிழந்துள்ளார். 19




## வீட்டுத் திட்டங்களில் 350 முறைப்பாடுகள்!

### மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்திட்டத் தெரிவு தொடர்பில் சுமார் 350 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் 19



## வடக்கிலுள்ள சிங்களக் குடியேறிகளுக்கு அரச உதவி வழங்கவே கோத்தா வருகை!

### சிங்கள பௌத்த மேலாதிக்க திமிரின் மற்றொரு வெளிப்பாடு என்கிறார் சுரேஸ்

யாழ்ப்பாணம், ஏப். 1

போரின் பின்னர் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களையும் ஆக்கிரமித்து ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றக் கிராமத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வருவதன் ஊடாக அவர் தெளிவான செய்தியைச் சொல்[illegible] கில் சிங்களக் குடியேற்றங்களுக்கு அரசின் உதவி ஒத்தாசை கிடைக்கும் என்றும், இவ்வா 19

### வவுனியாவைத் தொடர்ந்து சாவகச்சேரியிலும்

## அமெரிக்கர்களின் பணத்தை 'ஹக்' செய்த ஆசாமி கைது

கொழும்பு, ஏப். 1

அமெரிக்கர்களின் வங்கிக் கணக்குகளை 'ஹக்' செய்து தனது வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிட்ட மோசடி தொடர்பில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

41 வயதான சந்தேக நபரை குற்றவியல் புலனாய்வுத் துறையினர் கைதுசெய்துள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையூட்டுப் பெற்றாரெனக் கிராம அலுவலர் கைது



வவுனியா, ஏப். 1

**வவுனியா கோவில்குளம் பிரிவு கிராம அலுவலர், லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.**

குறித்த கிராம அலுவலர் நபர் ஒருவரிடம் கையூட்டுப் பெற்றார் என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, குறித்த கிராம அலுவலரிடம் விசாரணை நடத்தி அவரைக் கைதுசெய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், தனக்கு சுகவீனம் என்று கூறியதால் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த கிராம அலுவலர் தொடர்பில் அவர் பணியாற்றிய பல்வேறு இடங்களிலிருந்தும் பல முறைப்பாடுகள் கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்றுள்ளன. வவுனியா பிரதேச செயலகத்தில் இவ்வாறு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையிலும் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனினும் முறைப்பாடுகள் தொடர்ச்சியாக கிடைத்த நிலையில், அவருக்கு இடமாற்றங்களே வழங்கப்பட்டு வந்தன என்றும் அவை அனைத்து விடயங்கள் தொடர்பிலும் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த110.18)

# நியமனம் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

*சுகாதாரத் தொண்டர்கள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 1

தமக்கு நியமனம் கிடைக்கும்வரை ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக தாங்கள் நடத்திக்கொண்டிருக்கும் போராட்டம் தொடரும் என்று, தொண்டர்கள் தெரிவித்தனர்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர்களின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மார்ச் முதலாம் திகதியிலிருந்து நாம் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம். தீர்வு கிடைக்காமையால் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தோம். விவசாயத்துறை அமைச்சில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை கடந்த 30ஆம் திகதி சந்தித்துப் பேசியிருந்தோம். எம்மிடம் இருந்த சக பணியாளர்களின் கடிதங்கள், பட்டியல்கள், ஆவணங்கள் மற்றும் சுகாதார அமைச்சர் முன்னர் வழங்கியிருந்த பதில் கடிதங்கள் என்பனவற்றை அவர் எம்மிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

எனினும், ஜனாதிபதியின் வேலைப்பளு காரணமாக ஜனாதிபதியை எங்களால் சந்திக்க முடியவில்லை - என்றனர். (த-139)

# அனுமதி பெறாது திருமணம் இழுத்து மூடப்பட்டது மண்டபம்

யாழ்ப்பாணம், ஏப். 1

வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் மண்டபத்தில் அனுமதி பெறப்படாமல் திருமண நிகழ்வு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதையடுத்து, கரவெட்டி சுகாதார பணிமனையினரால், நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக மண்டபம் இழுத்து மூடப்பட்டது.

திருமண நிகழ்வை குறித்த திருமண மண்டபத்தில் நடத்துவதற்கு பல வாரங்களின் முன்னரே முற்பதிவு செய்யப்பட்டிருந்தது. திருமண மண்டபங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் என்பவற்றில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய நிகழ்வுகளை நடத்துவதாயின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கொரோனா செயலணி அண்மையில் அறிவித்திருந்தது.

எனினும், குறித்த திருமண நிகழ்வை மண்டபத்தில் நடத்துவதற்கு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்று சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் திருமணம் நடக்கவுள்ளது எனக் கிடைத்த தகவலையடுத்து, நேற்றுமுன்தினம் இரவு குறித்த திருமண மண்டபம் மூடப்பட்டது. (தஇ)

# நீதிவானின் உத்தரவை மீறி பொலிஸாரே சுங்கத்துக்கு எண்ணெய் பரல்கள் அனுப்பினர்

*ஐ.ஜி.பியிடம் விளக்க அறிக்கை கோருகின்றது நீதிமன்று*

கொழும்பு, ஏப். 1

புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தங்கள் அடங்கியுள்ளன என்ற சந்தேகத்தின் பேரில் தங்கொட்டுவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட தேங்காய் எண்ணெயை ஏற்றிய இரண்டு பவுசர்களும் நீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் சுங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டமை நேற்றுத் தெரியவந்தது.

மாரவில நீதிவான் நீதிமன்றத்தில், பொலிஸார் விடயங்களை முன்வைத்தபோதே இந்த விடயம் உறுதியானது.

தங்கொட்டுவை பொலிஸாரின் பொறுப்பில் இருந்த இரண்டு தேங்காய் எண்ணெய் பவுசர்களும் நேற்றுக்காலை பொலிஸ் நிலையத்தில் இருந்த வெளியில் கொண்டுவரப்பட்டு கொழும்புத் துறைமுக சுங்கப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தன.

பவுசரில் காணப்பட்ட தேங்காய் எண்ணெயின் மாதிரி சுங்கப் பிரிவுக்கு உள்ளே இருந்தே பரிசோதனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் பொறுப்பில் இதனை வைத்துக்கொண்டு மாதிரி பரிசோதனைக்கு அனுப்புமாறு மாரவில நீதிவான் ரக்சித்த அபேசிங்க உத்தரவிட்டிருந்த நிலையில், என்ன அடிப்படையில் இந்த இரண்டு பவுசர்களும் சுங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன என மாரவில நீதிவான் ரக்சித்த அபேசிங்க நேற்று பொலிஸாரிடம் வினவினார்.

பொலிஸ் சட்டப் பிரிவின் ஆலோசனைக்கு அமைய தாம் இரண்டு பவுசர்களையும் சுங்கத்திடம் ஒப்படைத்தோம் என்று தங்கொட்டுவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸார் செயற்பட வேண்டியது பொலிஸ் சட்டப்பிரிவின் ஆலோசனைக்கு அமைவாகவா அல்லது நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகவா என நீதிவான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வினவினார்.

தங்கொட்டுவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அதற்கு பதிலளிக்காத நிலையில், அது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு மாரவில நீதிவான் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு அடுத்த மாதம் 21ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டிய சர்ச்சைக்குரிய தேங்காய் எண்ணெய், அதனைக் கொண்டுவந்த நிறுவனங்களின் களஞ்சியசாலைக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில் தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது. (த-இ)


# முட்டாள்கள் தினம் இன்று

## ஏமாறாதீர்கள், ஏமாற்றாதீர்கள்

உதயன் வாசகர்களே! இன்று சர்வதேச முட்டாள்கள் தினம்.

எனவே, உங்களை யாராவது ஏமாற்றக்கூடும். ஏமாற்ற முயற்சிப்பார்கள். அதற்கு இடங்கொடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். அதுபோல நீங்களும் எவரையும் ஏமாற்றாது நடந்துகொள்ளுங்கள்.

# கும்பாபிஷேகம் நடக்கும்போது பெருக்கெடுத்தது தீர்த்தக் கிணறு!



கொழும்பு, ஏப். 1

கோவிலில் கும்பாபிஷேகம் நடக்கும்போது கோவில் தீர்த்தக்கிணறு பொங்கி வழிந்த அதிசயம் ஒன்று மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேசத்துக்கு உட்பட்ட மட்டக்களப்பு மேற்கு அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலய வளாகத்தில் அமையப்பெற்றிருக்கின்ற விக்னேஸ்வரர் கோவிலில் நேற்று கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்தநேரமே கோவில் தீர்த்தக் கிணறு பெருக்கெடுத்து வழிந்த அதிசய நிகழ்வு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# பொலிஸார் தாக்கியதால்தான் குடும்பத்தலைவர் இறந்தாரா?

*மனைவி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப். 1

கல்கிசை பொலிஸார் தாக்குதல் நடத்தியதால் தனது கணவர் உயிரிழந்தார் என்று களுபோவில பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 49 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி இரத்மலானை பகுதியில் வைத்து களுபோவிலபாடசாலை வீதியைச் சேர்ந்த எனது கணவரை கஞ்சாவுடன் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் அவரை பொலிஸார் தாக்கினர். பின்னர் எனது கணவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் திடீர் உடல்நலக்குறைவால் நேற்று மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் உயிரிழந்தார் என்று மனைவி தெரிவித்தார்.

இதேவேளை, இவரின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த-இ)

# கொரோனா சாவு நேற்று 2

கொழும்பு, ஏப். 1

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் 02 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 568ஆக உயர்வடைந்துள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியலை தீர்மானிக்கும் சக்தி நானே!

## மார்தட்டுகிறார் விமல் வீரவன்ச



கொழும்பு, ஏப்ரல் 1

இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தி என்னிடம் உண்டு. இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் அதனை நான் நிரூபித்துள்ளேன். இது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் தெரியும். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

விமல் வீரவன்ச தலைமையிலான அணிக்கு எதிராக ஆளும் கட்சிக்குள்ளிருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவரது கட்சி ஆளும் கட்சியிலிருந்து வெளியேறவுள்ளது எனத் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வியைத் தழுவினார். அவர் கொழும்பிலிருந்து சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்குச் சென்று அங்கு முடங்கினார்.

ஆனால் அவரை அங்கிருந்து நுகேகொடவுக்கு அழைத்து வந்து மாபெரும் மக்கள் பேரணியை நடத்திக் காட்டினேன். மீண்டும் அவர் தலைமையிலான அரசை நிறுவுவதில் பெரும் பங்கு வகித்தவன் நான்.

அதேவேளை 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நியமிப்பது என்பது தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் சச்சரவுகள் எழுந்தபோது, கோத்தாபய ராஜபக்சவையே நியமிக்கவேண்டும் என்று உறுதியாக நின்று அவரை தேர்தல் களத்தில் வெற்றியடையச் செய்ததிலும் எனக்கு மிக முக்கிய பங்குண்டு.

அந்த வகையில்தான் இலங்கையின் அரசியலையும், ஆட்சியையும் தீர்மானிக்கின்ற சக்தி எனது தலைமையிலான கட்சியிடம் இருக்கின்றது என்பதை இப்போது வெளிப்படையாகக் கூறுகின்றேன்.

இதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் மறக்கமாட்டார்கள்.

தேசிய சுதந்திர முன்னணி ஆளும் கட்சியில் பிரதான பங்காளிக் கட்சி. எமது கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேரப் போகின்றது எனவும், நாம் எதிர்க்கட்சியுடன் கைகோர்க்கப் போகின்றோம் என்றும் அரசுக்குள் இருக்கும் ஒரு சில அணியினர் கூறி வருகின்றனர்.

மாகாணசபைத் தேர்தலையொட்டி அரசியல் களத்தில் இவ்வாறு வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படுவது வழமை.

அரசுக்குள் இருக்கும் ஒரு சக்தியினர் என் மீதும் எனது கட்சி மீதும் சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை. அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம், என்றார். (ஒ.22)



## இந்தியாவில் ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்டது இலங்கை கப்பல்

கொழும்பு,ஏப்.1

ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள்களை ஏற்றிச் சென்ற இலங்கைக் கப்பல் ஒன்று, இந்தியக் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்டுள்ளது. கப்பலுடன் 6 இலங்கையர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர். 300 கிலோ கிராம் ஹெரோய்ன் மற்றும் துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள் என்பவை கப்பலில் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. 'ரவிஹான்சி' என்ற பெயரிலுள்ள இலங்கை மீன்பிடிக் கப்பலே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது. கேரளா திருவனந்தபுரம் கடற்பகுதியில் கடந்த 25 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட இந்தக் கப்பல், சென்னை போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஈரானின் சபாஹர் துறைமுகத்தில் இருந்து அடையாளம் தெரியாத படகொன்றின் மூலம், இந்தக் கப்பலுக்கு ஆயுதங்கள் பரிமாறப்பட்டன என்று தகவல் வெளியாகியுள்ளன. (க-இ)

## மகளைத் தாயாக்கிய தந்தை 10 வருடங்கள் கடூழியச்சிறை

திருமலை,ஏப்.1

தனது சொந்த மகளைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தி, குழந்தை பிரசவிக்கக் காரணமாக இருந்த தந்தைக்கு, 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. திருகோணமலை மேல் நீதிமன்ற நீதியரசர் மாணிக்கவாசகர் இளஞ் செழியன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவர் கர்ப்பமடைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று மருத்துவக் கலாநிதி நீதிமன்றில் சாட்சியம் வழங்கியிருந்தார். சந்தேகநபரான தனது தந்தை தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டார். அதனாலேயே தான் கர்ப்பமடைந்தேன் என்று சிறுமியும் நீதிமன்றில் சாட்சியம் வழங்கினார். சிறுமியின் சாட்சியத்தின் பின்னர் மன்றில் முன்னிலையாகாது தலைமறைவாகியுள்ள சந்தேகநபரை குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முந்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் 5 லட்சம் ரூபா நஷ்ட ஈடும் நீதிபதியால் விதிக்கப்பட்டது. (க-இ)

## கொரோனாவின் எதிரொலி: வேலையற்றோர் அதிகரிப்பு!

கொழும்பு,ஏப்.1

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குப் பின்னர், வேலையற்றோர் விகிதம் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த வேலையற்றோரில் இளைஞர் மற்றும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்று திணைக்களம் வெளியிட்டுள்ள புள்ளி விபரத்தில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் மூன் றாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கு அமைவாக, நாட்டின் வேலையற்றோர் 5.8 சதவீதத்தை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவலின்படி, நாட்டில் 4 லட்சத்து 86 ஆயிரத்து 524 பேர் வேலையில்லாதோர் பட்டியலில் இருந்து[illegible] னாத் தொற்று முடக்கத்துக்கும் பின்னரான 2020ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மீண்டும் பொருளாதார நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இந்தக் காலப்பகுதியிலும் அனைத்து வயது மட்டங்களிலும், அதிகமாக பெண்களே வேலையற்றவர்களாக இருந்துள்ளனர். இதற்கமைய பெண்களுக்கான வேலையின்மை விகிதம் 8.6 சதவீதமாகவும், ஆண்களுக்கானது 4.3 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது. 15 தொடக்கம் 24 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களின் வேலையின்மையானது 25.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது அனைத்து வயதினரிடையேயுமான அதிகபட்ச வேலையின்மை விகிதமாகும்.

படித்த ஆண்களை விட படித்த பெண்களின் விடயத்தில் வேலையின்மைப் பிரச்சினை மிகவும் கடுமையானது. இது முன்னைய கணக்கெடுப்பு முடிவுகளிலும் தொடர்ந்து காணப்பட்டது என்று மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-22)



## மாகாணத் தேர்தலை மக்கள் கோரவில்லை

### இந்தியாவே ஆர்வம் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஏப்.1

இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு, இந்தியாவே தற்போது கூடுதல் அக்கறை காட்டி வருகின்றது என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நளின் ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைகளுக்கான தேர்தல் ஈராண்டுகளாக நடத்தப்படாமல் உள்ளது. அவ்வாறு இருந்தும் குறித்த தேர்தலை விரைவில் நடத்துமாறு மக்கள் கோரவில்லை. அதனை வலியுறுத்தி போராட்டமும் நடத்தவில்லை. மாகாண சபைத் தேர்தல் நடைபெறவில்லை என்பதால், மாகாண சபை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லை. மாகாண சபையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் நெருக்கடி ஏற்படவில்லை. இந்த நிலையில் இரு தரப்புகளே தேர்தலைக் கோருகின்றன. முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களும், எதிர்காலத்தில் மாகாண சபைகளுக்குத் தெரிவாவதற்கு எதிர்ப்பார்ப்பவர்களுமே, தேர்தலை நடத்துமாறு கோருகின்றனர். அடுத்ததாக இந்தவிடயத்தில் இந்தியா ஆர்வம் காட்டி வருகின்றது.

அண்மையில் கூட வடக்குக்குச் சென்றிருந்த இந்தியத் தூதுவர், அங்குள்ள அனைத்துக் கட்சிகளையும் சந்தித்து, மாகாணத் தேர்தலுக்கான அழுத்தத்தைக் கொடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். இதன்படி தேர்தலை நடத்துவதிலும், 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலும் இந்தியாவுக்கு அதிக அக்கறை உள்ளமை புலப்படுகின்றது. என்றார். (க-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போரின் பின் பயங்கரவாதத்தால் எவருமே உயிரிழக்கவில்லையாம்

கூறுகிறார் கோத்தா



**கொழும்பு,ஏப்.1**

**இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர், பயங்கரவாதச் செயல்களால் எவரும் உயிரிழக்கவில்லை. அத்துடன் நாட்டில் பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.**

இலங்கைக்குப் புதிதாக நிய மிக்கப் பட்டுள்ள வியட்நாம் தூதுவர் ஹோ தீ தான் ரக், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தனது நியமனக் கடி தத்தை நேற்று முன்தினம் கைய ளித்தார். இது தொடர்பில் ஜனாதிப தியின் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது;

தமது நாடு சிக்கல்களுக்கு முகங் கொடுத்த காலங்களில் இலங்கை வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு வியட்நாம் தூதுவர் பாராட்டுக்க ளைத் தெரிவித்தார். தமது பதவிக் காலத்தில் இரு நாடுகளுக்குமிடை யிலான ஒத்துழைப்பு, நட்புறவை மென்மேலும் பலப்படுத்துவதற் கான அனைத்து நடவடிக்கைகளை யும் மேற்கொள்வோம் என்றும் தெரிவித்தார். விவசாய பொருளா தார அபிவிருத்தி, வறுமையை ஒழித்தல், கிராமிய மக்களின் வரு மானத்தை அதிகரித்தல் போன் றவை நாம் முன்னுரிமை வழங்கி யுள்ள விடயங்களாகும். அந்த நோக்கங்களை அடைந்து கொள் வதற்குத் தேவையான திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வரு கின்றன என்று ஜனாதிபதி தெரிவித் தார்.

இலங்கையில் முதலீடு செய்வதற் காக வியட்நாம் வர்த்தகர்களை ஊக்கப்படுத்துவதற்கும், வர்த்தக சுற்றுலாத் துறைகளின் அபிவிருத் திக்கு உயர் முக்கியத்துவம் வழங் குவதற்கும் வியட்நாம் தூதுவர் உறுதியளித்தார். என்றுள்ளது.

இதே வேளை போருக்குப் பின்னர் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21இல் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்கு தல் இலங்கை அரசால் பயங்கர வாதத் தாக்குதல்என்று கூறப்படு வதோடு அதில் 269 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப் பிடத்தக்கது. (க



## யாழ்.பொலிஸுக்கு குவியும் பாராட்டுகள்!

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத் தியோகத்தர் ஒருவரின் மனிதாபிமான செயற்பாட்டுக்கு, மக்கள் பாராட்டுக்களைத் தெரி வித்து வருகின்றனர்.

யாழ் .நகரத்தின் மத்திய பகுதி கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக தற்போது முடக் கத்தில் உள்ளது. இந்த நிலையில் நகரப் பகுதி யில் உள்ள வீதி ஒன்றில் உணவின்றித் தவித்த சித்த சுவாதீனம் உடைய முதியவருக்கு குறித் தபொலிஸ் உத்தியோகத்தர் உணவு வழங்கியுள் ளார்.

இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டதை அடுத்து அந்தப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு பாராட்டுக்கள் குவிகின்றன. முகப் புத்தங்களிலும் அந்தப் படம் பலராலும் பகிரப்பட்டு வருகின்றது. (ச-27)

## பேராசிரியரானார் திருமதி முருகானந்தம்



யாழ் பல்கலைக்கழக மருத் துவ பீடத்தின் நுண்ணுயிரி யல் துறைக்கு திருமதி. கலா மதி முருகானந்தம் பேராசிரி யராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தத் துறையின் முதலாவது பேராசிரியர் இவர் என்பது குறிப்பி டத்தக்கது. (ய)

## யாழ்ப்பாண மாநகர முதல்வர் காங்கிரஸில் தொடரலாம்

மேன்முறையீடு தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஏப். 1

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட் சியைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மாநக ரசபை உறுப்பினர்கள் சிலரை கட்சியி லிருந்து விலக்கும் தீர்மானத்துக்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்கக் கோரி, அந்தக் கட்சி செய்த மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட் டுள்ளது. யாழ் மாநக ர சபை முதல்வர், வி.மணிவண்ணன், மற்றும் உறுப்பி னர் பா.மயூரன் ஆகியோரை கட்சியிலி ருந்து விலக்குவதாக அண்மையில் அகில இலங்கை காங்கிரஸ் கட்சி அறி வித்தது. இதற்கு எதிராக யாழ் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வி.மணிவண் ணன் மற்றும் பா.மயூரன் ஆகியோர் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை அடுத்து அவர்களை கட் சியை விட்டு நீக்கும் முடிவுக்கு நீதி மன் றால் இடைக்காலத் தடைவிதிக்கப்பட் டது. இந்தத் தடைக்கு எதிராக, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் மாகாண குடியியல் மேல்நீதிமன்றத் தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்காலத் தடையை செல்லுபடியற் றதாக்க அவர்கள் கோரியிருந்தனர். இந்த மனுவையே மாகாண குடியியல் மேல்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள் ளது. (ப)

## தரகர்களின் செயற்பாட்டால் தேங்காய் வியாபாரிகள் பாதிப்பு

கிளிநொச்சி சந்தையில் இந்த நிலை

கிளிநொச்சி, ஏப். 1

தரகர்களின் செயற்பாட்டால் தமது வர்த்தகச் செயற் பாடுகள் பாதிக்கப்படுகின்றன என கிளிநொச்சி சேவைச் சந்தையில் தேங்காய் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான கிளிநொச்சி சேவைச் சந்தையில் தேங்காய் விற்பனைக்கு என 7 கடைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கடைகளின் வர்த்தகர்கள் நேற்று அந்தக் கடைகளுக்கு வெளியே வைத்து விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;

மொத்த வியாபாரிகள் மற்றும் தரகர்களின் செயற்பாட் டால் எமது வர்த்தகச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள் ளன. ஒரு வருடத்துக்கு மேலாக குறித்த செயற்பாடு கள் காணப்படுவது தொடர்பில் பிரதேச சபையினர் உள்ளிட்ட பலரது கவனத்துக்கு கொண்டு சென்ற போதிலும் தீர்வு எட்டப்படவில்லை. உள்ளூர் உற்பத் திகளை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதற்கு இடையூறாக தரகர்களின் செயற்பாடுகள் காணப்படு கின்றன. அதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்ப டுகின்றது. மொத்தமாகக் கொள்வனவு செய்து அதே இடத்தில் விற்பனை செய்வதனால் எமது வர்த்த செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும்- என்றனர். (ஐ-6)



## கோடா வைத்திருந்தவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம்

சாவகச்சேரி ஏப்.1

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட கொடிகாமம் வாசிக்கு சாவ கச்சேரி நீதிமன்று நேற்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட கொடிகாமம் பொலிஸ் நிலைய போக்குவரத்துக் கண்கா ணிப்புப் பிரிவினர் மோட்டார் சைக்கிளில் பரல் ஏற்றி வந்த நபரை மறித்து சோதனையிட்டனர். பரலுக்குள் காணப்பட்ட நீர் பரிசோதனை செய் யப்பட்டது. இதன்போது அது கசிப்பு உற்பத்திக் குப் பயன்படுத்தும் கோடா எனத் தெரியவந் தது. இந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய் யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு. எடுக்கப்பட்டது. விசாரணையில் சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதையடுத்தே அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக் கப்பட்டது. (ப-9)

## விபத்தில் இளைஞர் காயம்

கொடிகாமம், ஏப். 1




இரண்டு மோட்டார் சைக்கிள் கள் மோதி விபத்துக் குள்ளா னதில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் உசன் சந்தியில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

பளைப் பகுதியில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் உசன் பகுதியில் இருந்து ஏ9 வீதிக்குச் சென்ற மோட்டார் சைக்கிளே மோதுண்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# யார் எதிரி?

சீன அரசாங்கம் இலங்கைக்கு 'சைனோஃபார்ம்' என்ற கொரோனாத் தடுப்பூசியை கையளித்துள்ளது. சுமார் 6 லட்சம் டோஸ்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து சீனத்தூதுவரால் இலங்கை ஜனாதிபதியிடம் நேற்று வழங்கப்பட்டன. இந்த தடுப்பூசிக் கையளிப்பு நிகழ்வானது, பெரும் விழா போல விமான நிலையத்தில் கொண்டாடப்பட்டது. சீன நாட்டின் தூதுவரும், இலங்கை ஜனாதிபதியும் நேரடியாகச் சென்று தடுப்பூசியைப் பார்வையிட்டு, அவற்றைக் கையேற்பதென்பது சாதாரண நிகழ்வல்லவே!

ஆனாலும் இதில் உள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால், சைனோஃபார்ம் தடுப்பூசிக்கு சர்வதேச சுகாதார ஸ்தாபனம் இன்னமும் அனுமதி வழங்கவில்லை. அவ்வாறு சர்வதேச அங்கீகாரம் இல்லாத தடுப்பூசியை எதற்காக இலங்கைக்கு வழங்கினார்கள்? என்ற கேள்வியைக் கேட்டால், புதருக்குள் ஒளிந்திருக்கும் பூதத்தைக் கண்டுபிடித்துவிடலாம். நேற்று இலங்கைக்கு வந்து சேர்ந்த 6 லட்சம் தடுப்பூசிகளும் இலங்கையர்களுக்கு ஏற்றுவதற்கென வழங்கப்பட்டதல்ல. மாறாக இலங்கையில் உள்ள சீனர்களைக் கொரோனாவில் இருந்து பாதுகாப்பதற்காகவே சைனோஃபார்ம் தடுப்பூசிகள் அவசர அவசரமாக சீனாவால் அனுப்பப்பட்டுள்ளன. ஆக மொத்தம் குறித்த தடுப்பூசிகள் இலங்கை மீதுள்ள பாசத்தால் வழங்கப்பட்டவையல்ல. தன்னுடைய நாட்டுப் பிரஜைகளை காப்பதற்காக சீனாவால் அனுப்பப்பட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்குத்தான் விமான நிலையத்தில் நேற்று இவ்வளவு தடபுடல் ஏற்பாடு.

சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 'சைனோஃபார்ம்' தடுப்பூசிகளின்படி கணக்குப் பார்த்தால், இலங்கையில் 6 லட்சம் சீனர்கள் வசிக்கிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலைக் கண்டறியலாம்.அதாவது யாழ்.மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் மொத்த எண்ணிக்கைக்கு நிகராக சீனர்களும் இலங்கையில் உள்ளனர். இந்த 6 லட்சம் பேரும் சுற்றுலாப் பயணிகளாக வந்திருந்தாலாவது இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானம் அதிகரித்து, பொருளாதாரத்துக்கு நன்மை பயக்குமென கொஞ்சம் அமைதியடையலாம். ஆனால் இவர்கள் அனைவருமே இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்படவெனக் கொண்டுவரப்பட்டவர்கள். இவர்கள் வந்திருக்காவிட்டால், அந்தப் பணிகளில் உள்ளூர்வாசிகளே அமர்த்தப்பட்டிருப்பார்கள். அப்படி நடந்திருந்தால் 6 லட்சம் இலங்கையர்களுக்கு தற்காலிகமாகவேனும் வேலைவாய்ப்புக் கிட்டியிருக்கும்.

வேறு நாடுகள் இலங்கையில் ஏதேனும் பணிகளில் ஈடுபட்டால், தமது நாட்டவரை இங்கு இப்படி வகைதொகையாக அழைத்து வருவதில்லை. மிக முக்கியமான பொறுப்புகளில் மட்டும் தமது நாட்டவர்களை அமர்த்திக் கொண்டு, ஏனைய பணிகளுக்கு உள்ளூர்வாசிகளைப் பயன்படுத்துவதே அந்த நாடுகளின் வழக்கம். இதனால் பொருளாதாரரீதியாக பயன்பெறும் நாட்டுக்கும், பயன் வழங்கும் நாட்டுக்குமென இருதரப்பு ஆதாயம். ஆனால் சீனா மட்டும் தன் நாட்டுப் பிரஜைகளை இப்படி லட்சக் கணக்கில் இலங்கைக்கு கொண்டுவந்து, இங்குள்ளவர்களின் வேலைவாய்ப்பையும் தட்டிப்பறிக்கின்றது. லட்சக் கணக்கில் தன் சொந்த நாட்டு ஊழியப்படையை சீனா கொண்டு வந்ததன் பின்னணியில் தனியே பொருளாதார நலன் மட்டும் தங்கியிருக்கவில்லை. இலங்கையை தன்னுடைய குடியேற்ற நாடாக மாற்றுவதன் ஒரு அடையாளமாகவே, சீனத்தொழிலாளர்கள் லட்சக்கணக்காகக் கொண்டுவரப்பட்டு, தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனச் சொல்லலாம். கொழும்புத் துறைமுக நகரம் கட்டிமுடிக்கப்பட்டதும் இன்னும் சில லட்சம் சீனர்கள் வரப்போகிறார்கள். காலப்போக்கில் சீனர்களே இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் இனமாக இங்கு எழுச்சி பெறக் கூடும்.யார் கண்டது, சிங்களவர்கள் கூட சிறுபான்மையினராக இலங்கையில் மாறும் நிலையும் வரலாம். இலங்கையின் வளங்கள் எல்லாம் சுரண்டப்பட்டு,சீனப் பேரரசு இன்னும் வலுவாக்கப்படும். கண்ணுக்கு முன்னே நிகழும் பேரபாயத்தை உணராமல் இன்னும் சிங்கள பெரும்பான்மையினத்தவர்கள், தமிழர்களையும், முஸ்லிம்களையும் தங்கள் எதிரிகளாக நினைத்து ஒடுக்க முனைகின்றார்கள். ஆனால் அவர்களின் உண்மையான எதிரிகள் சிறுபான்மையினர் அல்லர், இந்த நாட்டை பல்வேறு வகையிலும் ஆக்கிரமித்து சுரண்டும் அந்நிய சக்திகளே. இந்த உண்மையை பெரும்பான்மையினர் உணரும்போது காலங்கடந்திருக்கும்.




# பாற்பண்ணை கிராமத்துக்கு தன்னார்வலர்கள் உதவி!

**யாழ்ப்பாணம், ஏப். 1**

**'கண்காணிப்பு வலயம்' என்று அறிவிக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாற்பண்ணை கிராமத்துக்கு தன்னார்வலர்கள் உதவிகளை வழங்கி வருகின்றனர். கடந்த இரு நாள்களில் 690 குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.**

கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்ததையடுத்து பாற்பண்ணை கிராமம் முடக்கப்பட்டது. ஆனாலும் அரசின் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அதிகாரிகளால் 'கண்காணிப்பு வலயம்' என்றே அந்தப் பகுதி அழைக்கப்படுகின்றது.

முடக்கம் காரணமாக ஆயிரத்து 136 குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. அவர்களுக்கு அரசின் உதவி கிடைக்காத நிலையிலும் பல்வேறு தன்னார்வலர்கள், நல்லூர் பிரதேச செயலகம் மற்றும் அந்தப் பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை 300 குடும்பங்களுக்கும் நேற்றுப் புதன் கிழமை 390 குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களில் 32 குடும்பங்களுக்கு அரசின் நிவாரணக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

# மூடப்பட்ட வர்த்தக நிலையங்களை மீளத் திறக்க நடவடிக்கை தேவை

## *யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ்ப்பாண மாநகர் முடக்கப்பட்டிருக்கும் நிலையில் வர்த்தகர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் வர்த்தக நிலையங்களை மீளத் திறப்பதுடன், புதிய கட்டுப்பாட்டு முறைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாநகர முதல்வர் மணிவண்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

யாழ்.நகரில் சடுதியாக ஏற்பட்ட கொரோனாப் பரவலை அடுத்து மாநகரத்தில் உள்ள நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதால் வர்த்தகர்களும் பொதுமக்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைத் தொடர்ந்து வர்த்தகர்கள் மத்தியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதன் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இவை தொடர்பில் பல முறைப்பாடுகள் வர்த்தகர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் எனக்கு கிடைத்துள்ளன.

இது தொடர்பில் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கேட்டபோது,குறித்த பரிசோதனைகள் கொழும்பில் மேற்கொள்ளப்படுவதால் அதன் முடிவுகள் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படுகிறது என்று தெரிவித்தார்.

உறுதிப்படுத்தப்படாது கிடைத்த தகவலின்படி 10வீதத்துக்கும் குறைவானவர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட வாய்ப்புள்ளது என்று அறியக்கிடைக்கின்றது. விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் - என்றார். (ஐ-26, 20)

*அழகியல் பாடங்களுக்கு*

# மே மாதம் செய்முறை பரீட்சை

கொழும்பு, ஏப்.1

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர அழகியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் மே 18 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறும் என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகளுக்கான நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மார்ச் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெற்றது. சுமார் 6லட்சத்து 22 ஆயிரம் பரீட்சார்த்திகள் 4 ஆயிரத்து 513 நிலையங்களில் பரீட்சை எழுதினர். பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மார்ச் 27 அன்று ஆரம்பமாகின. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினை நீண்ட கால தலையிடி

## இராஜாங்க அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

**மன்னார்,ஏப்.1**

**இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை நீண்ட காலமாகத் தீர்க்க முடியவில்லை. எல்லை தாண்டும் இந்திய மீனவர்க ளைத் தடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டே இருக்கின்றோம் என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி, மீன் பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் எதனையும் வழங்குவதற்கு நாங்கள் தீர்மானிக்கவில்லை.

மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிக்கும் விடயத்தைக் கையாள்வதில் எமக்கு இரண்டு பிரச்சினைகள் உள்ளன. இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் எமது கடற்பரப்புக்குள் அதிகம் நுழைகின்றன.

அதே போன்று எமது மீனவர்களும் இந்திய எல்லைக்குள் நுழைகின்றனர். இந்தப் பிரச்சினைகளைக் கையாள்வது குறித்து நாங்கள் கலந்துரையாடி உள்ளோம்.

இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு, எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளோம். கடல் எல்லைகளில் கடற்படையினரும், கடலோரப் பாதுகாப்புப் பிரிவினரும் கண்காணிப்பில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)



## கடல் அட்டை ஏற்றுமதி கிராமம் வலைப்பாடு கிராமத்தில் திறப்பு

கிளிநொச்சி,ஏப்.1

கிளிநொச்சி வலைப்பாடு கிராமத்தில் கடல் அட்டை ஏற்றுமதி கிராமம் நேற்றுமுன்தினம் கடற்றொழில் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகரவால் திறக்கப்பட்டது.

"சுபீட்சத்தின் நோக்கு" என்ற கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்தக் கடலட்டை ஏற்றுமதிக் கிராமம் திறக்கப்பட்டது.இதன்போது கடல் அட்டை குஞ்சுகள் கடலில் விடப்பட்டன. (ஐ-113)

## கடலட்டை இனப்பெருக்க நிலையம் ஓலைத்தொடுவாயில் நேற்றுத் திறப்பு

மன்னார், ஏப். 1

கடற்தொழில், கைத்தொழிலை மேம்படுத்தும் வகையில் மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் அமைக்கப்பட்ட 'கடலட்டை இனப்பெருக்க நிலையம்" நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் இணைந்து கடலட்டை நிலையத்தைத் திறந்தனர்.

நிகழ்வில் அமைச்சர் தெரிவித்ததாவது;

அடுத்த சில ஆண்டுகளில் மன்னார் மாவட்டத்தை நாட்டின் கடற்றொழில் கேந்திர வலயமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். பேசாலையில் நவீன வசதிகளுடன் கூடிய துறைமுகத்தை உருவாக்கி அதனூடாக இம்மாவட்டத்தின் கடற்றொழில்துறையை மேம்படுத்தவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம்.

இதேவேளை கடற்றொழிலாளர்களது நலன்கருதி தலைமன்னாரில் புதியதொரு ஆழ்கடல் மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ள ன- என்றார்.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.திலீபன்,மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் , திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56)

## 3 மாதத்தில் 28 மாணவர்கள் இடை விலகல் மீள இணைக்கும் நடவடிக்கைகள் துரிதம்

வவுனியா, ஏப். 1

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்ற 28 மாணவர்கள் கடந்த மூன்று மாதங்களில் பாடசாலையை விட்டு இடை விலகியுள்ளனர். அவர்களை மீள இணைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் கே.சுலோஜனா இவ்வாறு தெரிவித்துள்ளார். சிறுவர், பெண்கள் பாதுகாப்புத் தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான 3 மாத காலப்பகுதியில் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 28 மாணவர்கள் இடை விலகியுள்ளனர் என கிராம அலுவலர் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மாணவர்கள் இடைவிலகியமைக்கான காரணத்தைக் கண்டறிந்து அவர்களை மீளவும் பாடசாலை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் மற்றும் எமது பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், பாடசாலை இடைவிலகும் மாணவர் விபரத்தை அதிபர்கள் எமது பிரதேச செயலகத்துக்கு வழங்கினால் அவர்களை மீள் இணைப்பதற்கான நடவடிக்கைகளை கிராம அலுவலர் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களினூடாக முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-18)

## பிரிவுபசார நிகழ்வில் பங்கேற்க முட்டுக்கட்டை

### அழுத்தங்களை அம்பலப்படுத்தினார் முன்னாள் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஏப். 1

எனது பிரிவுபசார நிகழ்வில் பங்கேற்க வேண்டாம் என்று சில முகாமையாளர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி முன்னாள் உதவி ஆணையாளரும், தற்போது மன்னார் மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளருமான க.மகேஸ்வரன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களின் ஏற்பாட்டில், முன்னாள் உதவி ஆணையாளர் மகேஸ்வரனுக்கான பிரிவுபசார நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது எட்டாண்டுகள் கால சேவையைப் பாராட்டி இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது. இதனை ஒழுங்கு செய்து நடத்திக் கொண்டிருக்கும் அனைவருக்கும் நன்றிகள்.

நான் எனது கடமையைச் சரிவரச் செய்தேன். எவருக்கும் பாரபட்சம் காட்டவில்லை. சிலர் கோரிய இடமாற்றங்களை நான் வழங்காமலிருந்ததற்காக அவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாமல் உள்ளார்கள். அவர்கள் கோரிய இடமாற்றங்களில் நியாயம் இருந்திருப்பின் அதனை நான் செய்திருப்பேன்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருந்த சில சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களை கடந்த திங்கட்கிழமை இரவு சமுர்த்தித் திணைக்களத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் இருவர் தொடர்புகொண்டு பிரிவுபசார நிகழ்வுக்கு செல்லவேண்டாம் என்று அழுத்தங்கள் கொடுத்துள்ளனர். இவ்வாறானவர்களின் அழுத்தங்கள், நெருக்கடிக்குள் மத்தியில்தான் நான் எட்டு ஆண்டுகள் பணியாற்றினேன்.

எந்தவொரு அரசியல் தரப்புக்குச் சார்பாகவோ, எதிராகவோ நான் செயற்படவில்லை - என்றார். (ஒ.5)



## பண மோசடி; ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 1

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருகின்றேன் என்று கூறி, பல்வேறு நபர்களிடம் பண மோசடியில் ஈடுபட்ட நபர், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அட்டலுகமப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர், 30 லட்சத்துக்கும் அதிகமான பணத்தைக் கைமாற்றாகப் பலரிடம் பெற்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (க-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு லட்சம் குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்கத் திட்டம்

## ஜகத்குமார சுமித்த ஆராய்ச்சி எம்.பி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.1

**மிக மோசமாக வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுப்ப தற்கான பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. அந்த வகையில் 2 லட்சம் குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்பதற்கான திட்டம் அரசால் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்த ஆராய்ச்சி தெரிவித்தார்.**



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட அவர், இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பில் நல்லாட்சி அரச காலத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பில் நாங்கள் பல்வேறு போராட்டங்களை முன் னெடுத் திருந்தோம். அந்தப் போராட்டங்கள் ஊடாக அவர் ஒரு சந்தர்ப்பத்தில் மன்னிப்பு கேட்குமளவுக்கு நாங்கள் அன்று வலுவான சங்கமாக போராட்டத்தை முன்னெடுத்தோம். உண்மையில் நல்லாட்சி அரசு என்பது மக்களுக்கு தொந்தரவையே கொடுத்தது. பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெற்றன. அவ்வாறான நிலையிலிருந்து இந்த நாட்டின் ஆட்சியை நாங்கள் மாற்றியுள்ளோம்.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு பல்வேறு வரப்பிரசாதங்களை முன்னெடுக்க இந்த அரசு தீர்மானித்துள்ளது. மிக மோசமாகக் காணப்படும் வறுமையிலிருந்து மக்களை மீட்பதற்கு பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் 2 லட்சம் குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்பதற்கான திட்டம் அரசால் வகுக்கப்பட்டுள்ளது. அந்தக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்காக பணம் வழங்குதல், வீட்டுடன் கடைகள் அமைத்து கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அதற்கான நிதியை அரசு வழங்கியுள்ளது- என்றார். (ஜ-6)

# அலைபேசி திருட்டு; சந்தேகநபருக்கு மறியல்

சாவகச்சேரி ஏப்.1

**வீட்டினுள் புகுந்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியைத் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.**

இந்தச் சம்பவம் மந்துவில் கிழக்கில் அண்மையில் இடம்பெற்றது. வீட்டின் உரிமையாளர் குளியல் அறைக்குச் சென்ற நிலையில், திருட்டுத்தனமாக வீட்டினுள் புகுந்த திருடன் அங்கு வைக்கப்பட்டிருந்த அலைபேசியைத் திருடிச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்தனர். அவர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் இதன்போதே அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ப-9)



# பயணப் பொதியில் கசிப்பு; தருமபுரத்தில் இருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.1

பயணப் பொதியில் மறைத்து வைத்து கசிப்பு கடத்திய குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட இருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 15 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-113)

# 25 மாவட்டங்களிலும் நகர வன பயிர்ச்செய்கை

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.1

நடைபாதை ஒழுங்குடன் நகர வன பயிர்ச்செய்கை 25 மாவட்டங்களிலும் உருவாக்கப்படும் என்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தற்போதைய அரசின் கீழ் மீள் உருவாக்கும் சக்தியை மேம்படுத்தி, சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். சுற்றாடலுக்கு காபனை வெளியிடுவது, அசேதன பசளைப் பாவனை மற்றும் அதிக மின்சார பயன்பாடு என்பவை தற்சமயம் உயர்வடைந்துள்ளன.

இவ்வாறான விடயங்களைக் கருத்திற்கொண்டு புதிய திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது - என்றார். (ப)

# விதண்டாவாதம் பிடிக்காமல் சர்வதேச நம்பிக்கையை வெல்க

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஏப். 1

'ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானத்தை விமர்சிப்பதை அரசு உடன் நிறுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் விதண்டாவாதம் பிடிக்காமல் சர்வதேசத்தின் நம்பிக்கையை அரசு வென்றெடுக்க வேண்டும் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஜெனிவா நிலைமைகளை மதிப்பிடுவதில் இலங்கை அரசு யதார்த்தமாக இருக்க வேண்டும் என்றும், சர்வதேச சமூகத்தின் கரிசனைகளுக்குத் தீர்வு காண்பதில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். ஐ.நாவின் புதிய தீர்மானத்தில் போர்க்கால பொறுப்புக்கூறல் களைவிட, இராணுவமயமாக்கல் உட்பட 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை செயற்படுத்துவதற்குப் பதிலாக ராஜபக்ச அரசு 600 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொலை செய்த கருணாவுக்கு உயர் அரசியல் பதவி வழங்கியது என்றும் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டினார். சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கும் உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறையை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம், கொழும்பு பிரிட்டன் தூதரகத்தின் இறுதிப் போரின் போதான இராஜதந்திர தகவல் பரிமாற்றங்களை வெளிப்படுத்துமாறு அரசு கோரியுள்ள நிலையில், 'இலங்கையில் ஆதாரங்களை ஆராயும் ஐ.நாவின் புதிய பிரிவு, அனைத்து வகையான தகவல்களையும் கண்டறிவதில் எவ்வித சர்ச்சையும் இருக்காது' என்றும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (ம-22)

# பஸ் தரிப்பிடம், கிணறு மக்களின் பாவனைக்கு

வவுனியா,ஏப்.1

முல்லைத்தீவில் பஸ் தரிப்பிடம் மற்றும் கிணறு என்பவை தாய்த்தமிழ் கலாசாரப் பேரவையின் செயலாளர் எம்.ராஜன் தலைமையில் நேற்று மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட வலைஞன்மடம் கிராமத்தில் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக பிரதான வீதிக்கான பஸ் தரிப்பிடம் ஒன்றும், பொக்கணை கிராமத்தில் அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் மக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக பொதுக் கிணறு ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இத்தாலி மனிதநேய சங்கத்தின் பணிப்பாளர் மகேஸ்வரநாதன் கிருபாகரனின் ஏற்பாட்டில், வேலணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் வைத்திலிங்கம் சிவநேசம் அம்மாவின் 12ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு ஜேர்மனியில் வசிக்கும் வைத்திலிங்கம் ஜெயக்குமாரின் நிதிப்பங்களிப்பில் குறித்த பஸ் தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டு திறக்க ப்பட்டது. (ச -110,222)

# முன்னாள் நிதி அதிகாரியால் 50 மில்லியன் ரூபா மோசடி

## கோப் குழு விசாரணையில் தகவல்

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞானப் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின், 50 மில்லியன் ரூபா நிதி, முன்னாள் உதவி நிதி அதிகாரியால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தால் பேணப்பட்டு வந்த நிலையான வைப்புக் கணக்குகளில் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது என்று நாடாளுமன்றத்தின் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குறித்த நிறுவனத்தால் மக்கள் வங்கியின் பேராதனைக் கிளையில் பேணப்பட்டு வந்த 14 நிலையான வைப்புக்கள் மூடப்பட்டு, பெறப்பட்ட 93 மில்லியன் ரூபாவில், 37 மில்லியன் ரூபா மாத்திரம் மீண்டும் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. 50 மில்லியன் ரூபா இந்த நிதி அதிகாரியால் மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி மோசடியுடன் தொடர்புபட்ட அதிகாரி பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த நிறுவனத்தின் 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கோப் குழு ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டத்துக்கு முரணாகவே சிங்கராஜ வனம் அழிப்பு

## போராட்டத்துக்கு அழைக்கிறது ஐ.தே.க.

**கொழும்பு,ஏப்.1**

**சிங்கராஜ மழைக்காடுகளுக்குள் நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட திட்டத்தை, நாட்டின் சட்டங்களுக்கு முரணாக அரசு முன்னெடுக்க முயல்கிறது. இதனைத் தடுத்து நிறுத்த ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும். போராட்டங்களையும் முன்னெடுக்கும்.**

இதற்கு நாட்டின் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளும் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கராஜ வனத்துக்குள் நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட திட்டத்துக்கு யுனெஸ்கோவின் அனுமதியை நாடியுள்ளோம் என்று அரசு கூறிய போதிலும், நாட்டின் சட்டங்களிலிருந்து அதற்கான அனுமதி ஒரு போதும் கிடைக்காது.

ஐக்கிய நாடுகள் சபையும், அவற்றின் அனைத்து துணை அமைப்புகளும் நாட்டின் இறையாண்மையை அங்கீகரித்து அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். யுனெஸ்கோ என்ன முடிவு செய்தாலும், சிங்கராஜ மழைக்காடுகளுக்குள் எந்தவொரு செயலையும் முன்னெடுக்க முடியாது என்றே நாட்டின் சட்டம் கூறியுள்ளது. அத்தகைய செயற்பாடுகளைத் தடையும் செய்துள்ளது.

1988 ஆம் ஆண்டின் தேசிய வனப் பகுதியின் பாரம்பரிய பகுதிகள் சட்டத்தின் கீழ் சிங்கராஜா மழைக்காடுகள் பாதுகாக்கப்படுகின்றன.

அத்துடன், குறித்த சட்டம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சிங்கராஜ காடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நிறைவேற்றப்பட்டது.

இதனிடையே, சிங்கராஜ மழைக்காடுகளுக்குள் இந்தத் திட்டத்தைத் தொடர்வதில் அரசின் நடவடிக்கைகள் இந்த நாட்டின் சட்டங்களுடன் நேரடியாக முரண்படுகின்றன.

அத்துடன், இயற்கைச் சூழலுடன் காணப்படுகின்ற இலங்கை அரசின் பொறுப்புகள், நாட்டின் சட்டங்களால் மட்டுமல்ல, சர்வதேச நாடுகளுக்கிடையில் உள்ள உறவுகளாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

குறிப்பாக, பாரிஸ் காலநிலை ஒப்பந்தம், கியோட்டோ நெறிமுறை மற்றும் ரியோ உச்சி மாநாடு உள்ளிட்ட பல சர்வதேச ஒப்பந்தங்களில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் மதிக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

எனவே, இந்த நாட்டுக்கு எதிரான இந்தக் கொடூரமான குற்றத்தை நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் - என்றார். (க-22)

# விபத்துக்களை குறைக்க பொலிஸார் களத்தில்

*3 நாள்கள் சிறப்பு நடவடிக்கைகள்*

கொழும்பு,ஏப்.1



நாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு, பொலிஸார் சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நட வடிக்கைகள் 3 நாள்கள் தொடரும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறப்பு நடவடிக்கைகளின் போது, மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று போக்குவரத்துப் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் நாளைமறுதினம் 3 ஆம் திகதி வரை தொடரும்.

இலங்கையில் உள்ள 8.3 மில்லியன் வாகனங்களில், 56 வீதமானவை மோட்டார் சைக்கிள்களாகும். அதனால் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகரித்துள்ளன. அதேவேளை கடந்த 24 மணித்தியாலத்தில் பதிவான வீதி விபத்துக்களில் எட்டுப் பேர் உயிரழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# கடன் நெருக்கடியை வெளிப்படுத்துங்கள்

## அரசிடம் ஐ.ம.ச.கோரிக்கை

கொழும்பு,ஏப்.1

நாட்டில் டொலரின் பெறுமதி உயர்வடைந்து வருவதால், சீனாவிடம் பெற்றுக் கொண்ட கடனைச் செலுத்தக் கூடிய வாய்ப்பு அரசுக்கு அரிதாகவே உள்ளது. எனவே இது தொடர்பில் அரசு வெளிடைப் படையாகப் பேச வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனா நாணயமான யுவானைப் பயன்படுத்தி சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட சில கடன்களை திருப்பிச் செலுத்த முடியும் என்று அரசு உறுதியளித்திருந்தாலும், இந்தக் கடன்களின் விலைப்பட்டியல் டொலரில் எழுதப்பட்டுள்ளதால் டொலரிலேயே அரசு செலுத்த வேண்டியிருக்கும்.

நாட்டில் டொலரின் பெறுமதி உயர்வடைந்து வருவதால் அரசால் அத்தகைய கடன்களைச் செலுத்தக் கூடிய வாய்ப்பு அரிதாகவே உள்ளது. இந்த நிலையில் யுவானில் கடன்களைச் செலுத்த முடியும் என்று கூறி, அரசு தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க முயற்சிக்கிறது. இவை நடைமுறை தீர்வுகள் அல்ல - என்றார். (க-22)

# சைனோஃபார்ம் தடுப்பூசி முதற்கட்டம் சீனர்களுக்கு

கொழும்பு,ஏப்.1

சீனாவிலிருந்து தருவிக்கப்படும் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் முதற்கட்டமாக இலங்கையிலுள்ள சீனப் பிரஜைகளுக்கே செலுத்தப்படும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னரே, இலங்கைப் பிரஜைகளுக்குச் செலுத்தப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் இணையவழியூடாக நடைபெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இதுவரையில் இலங்கையில் சுமார் எட்டரை லட்சம் பேருக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்துக்கு 4 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. இவை தவிர சீனாவில் தயாரிக்கப்படுகின்ற 6 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கும்.

அத்துடன் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இந்தியாவிலிருந்து அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இரண்டாம் கட்டமாக தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

சைனோஃபார்ம் தடுப்பூசிகள் இலங்கையிலுள்ள சீனப் பிரஜைகளுக்கு முதற்கட்டமாகச் செலுத்தப்படும். குறித்த தடுப்பூசி தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட இரசாயனப் பரிசோதனை அறிக்கையை சீன மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்வதில் காணப்படுகின்ற சிக்கல் காரணமாக, உலக சுகாதார ஸ்தாபனத்தால் அனுமதி வழங்குவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே அறிக்கையின் மொழிபெயர்ப்பு உலக சுகாதார ஸ்தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின்பு இலங்கையிலுள்ள ஏனைய பிரஜைகளுக்கும் சீனத் தடுப்பூசி செலுத்தப்படும் - என்றார். (க-இ)

# வீதி விபத்துக்களால் 18 பொலிஸார் சாவு!

கொழும்பு,ஏப்.1

நாட்டில் இந்த வருடத்தின் முதல் 3 மாதங்களில் பதிவாகிய வீதி விபத்துக்களில் சிக்கி 18 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். 72 பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அதேவேளை 2020 ஆம் ஆண்டில் வீதி விபத்துக்களில் 293 பொலிஸார் காயமடைந்தனர். அவர்களில் 28 பேர் படுகாயமடைந்தனர் எனவும் அவர் தெரிவித்தார். (க-22)

# அதிபர்கள் நியமனத்தில் அழுத்தங்கள் இருக்காது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.1



நாடு முழுவதும் நியமிக்கப்படவுள்ள அதிபர்கள் நியமனத்தில் அரசியல் பின்புலம் அல்லது வேறு அழுத்தங்கள் பிரயோகிக்க இடமளிக்கப்பட மாட்டாது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 4 ஆயிரத்து 600 அதிபர்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. சரியான நடைமுறையில் இந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் இடம்பெறும் ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டும். அரசியல் அழுத்தங்கள் மூலம் மாணவர்களைப் பாடசாலைக்குள் உள்வாங்கும் செயற்முறை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் கல்வித்துறையின் தரத்துக்குச் சரியான வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

*அஞ்சல் துறையினர்*

# சுகவீன விடுமுறை போராட்டத்தில்

கொழும்பு,ஏப்.1

அஞ்சல் துறையின் சில தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

ஆள்சேர்ப்பு முறைமையில் நிலவும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு சேவை தொழிற்சங்கத்தின் தலைவர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார்.

அதேவேளை அஞ்சல் திணைக்களத்தின் அனைத்துப் பணிக்குழாத்தினரின் விடுமுறைகளை இரத்துச் செய்வதற்கு அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

உடல்நலக் குறைபாட்டால் கடமைக்குச் சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பத்தில், அரச மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளை மதிப்பிட விசேட குழு நியமனம்

கொழும்பு,ஏப்.1

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிளை மதிப்பீடு செய்வதற்கு, தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் தலைமையில் ஐவர் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளில் மத அல்லது இன ரீதியான பெயர்களைக் கொண்டுள்ள கட்சிகள் தொடர்பிலும், கட்சிகளின் யாப்பில் இவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலும் இந்தக் குழு ஆராயும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை உத்தேச தேர்தல்களை இலக்காகக் கொண்டு, தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கான பிரிவுக்கு நியமிக்கப்படவுள்ள அரச ஊழியர்கள், பொலிஸ் அதிகாரிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்காக, சகல மாவட்டங்களையும் உள்ளடக்கி, ஏப்ரல் இறுதி வாரம் முதல் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளில் 2019 ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய கணக்காய்வு அறிக்கையை இதுவரையில் வழங்காத கட்சிகளாக 4 கட்சிகள் இனங்காணப்பட்டுள்ளன.

குறித்த 4 கட்சிகளும், எதிர்வரும் 22 ஆம் திகதி அதனைத் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்காது விட்டால், கட்சிகளை இடைநிறுத்த நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# விடுவிக்கப்படவுள்ளவர்களில் அரசியல் கைதிகள் எவருமில்லை

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 1**

**சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கும் கொள்கைத்திட்ட செயற்பாட்டுக் குழு அறிக்கையின்படி 8ஆயிரம் சிறைக்கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர். எனினும் அரசியல் கைதிகள் எவரும் விடுவிக்கப்படமாட்டார்கள் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகள் தொகை அதிகரித்துள்ளதுடன், அங்கு நிலவிவரும் நெருக்கடிதன்மையைக் குறைத்துக்கொள்வதற்காக விசேட பொறிமுறையின் ஊடாக அவர்களில் ஒரு தொகுதியினருக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்வதற்கான வேலைத் திட்டமொன்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராகவிருந்த மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயின் பதவிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.எம்.என்.சி. தனசிங்கவை தலைவராகக் கொண்ட குழுவினரால் ஆராயப்பட்டு வகுக்கப்பட்ட கொள்கைத் திட்ட அறிக்கை நீதி அமைச்சரான அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஆகியோரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இதன் போது நீதி அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்ததாவது;

சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், சிறைக்கைதிகளும் மனிதர்களே என்ற கோட்பாட்டின் படி அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும். அவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்படாது சமூகத்தினருடன் ஒன்றிணைந்து வாழ்வதை விரும்புகிறார்கள். விடுவிக்கப்பட்டவர்கள் சமூகத்துக்குள் விமர்சிக்கப்படாதிருக்க வேண்டும்.

எனினும் இந்த கொள்கைத் திட்டத்தின் ஊடாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட மாட்டார்கள். இக்குழுவினரால் ஆராயப்பட்டு வகுக்கப்பட்ட கொள்கைத் திட்ட அறிக்கையில் அரசியல் கைதிகளை விடுவிக்கும் திட்டம் இல்லை. அரசியல் கைதிகளுடன், தீவிரவாதம், பாலியல் துஷ்பிரயோகம்,போதைப்பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களைப் புரிந்த சிறைக்கைதிகளும் இந்த பொது மன்னிப்பு கொள்கைத் திட்ட செயற்றிட்ட அறிக்கையில் உள்வாங்கப்படவில்லை. சிறு சிறு குற்றங்களைப் புரிந்தவர்கள், நீண்ட காலமாக சிறைவாசம் அனுபவிப்பர்களை விடுதலை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் செயற்படுத்த எண்ணியுள்ளோம். அதன்படி, 80 ஆயிரம் சிறைக்கைதிகள் விடுவிக்கப்படுவர்- என்றார். (ப)



# சீன கொவிட் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன

கொழும்பு, ஏப்.1

சீனாவின் சினோஃபார்ம் கொவிட் 19 தடுப்பூசியின் 6 லட்சம் டோஸ்கள் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளன. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் மூலம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இவை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

சீனாவில் தயாரிக்கப்படும் சினோஃபார்ம் கொவிட் தடுப்பூசிகள் முதற்கட்டமாக இலங்கையில் உள்ள சீன பிரஜைகளுக்கு மாத்திரம் வழங்கப்படும்.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னரே இலங்கை பிரஜைகளுக்கு அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (ஐ-இ)

# அரசின் தடைப்பட்டியல் சிறுபான்மையினருக்கான புதைகுழி

## சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.1

புலம்பெயர் அமைப்புக்கள் உட்பட தனி நபர்களுக்காகக் கொண்டு வரப்பட்டுள்ள தடை சட்டம் ஆபத்தான விடயம். சிறிய தேசிய இனங்களை குழி தோண்டிப் புதைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையாகவே இது எங்களுக்குத் தென்படுகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்புச் செயலாளரால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஒரு ஆபத்தான விடயம். இதுபோன்று ஏற்கனவே தடைகள் கொண்டு வரப்பட்டன. அவை ரணில் மற்றும் சிறிசேன ஆகியோரின் தலைமையிலான அரசுக்களின் காலத்தில் நீக்கப்பட்டு, சுமுகமான சூழல் ஏற்படுத்தப்பட்டது.

அந்த அரசியல் சூழ்நிலையில் இரு தரப்புப் பேச்சு, மனித உரிமை விடயங்களைக் கையாளுதல், மனித உரிமைகளுக்கான தீர்வை எட்டுதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் அமைத்தல் ஆகியவை உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆனால் தற்போதைய அரசு சமாதானத்தையோ அல்லது மக்களின் உண்மை நிலவரங்கள் பற்றியோ கவனத்தில் எடுக்கும் என்று கருத முடியாது. சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் அதிக மான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நீதி வேண்டும் என்று குரல் கொடுத்த போது, புலம்பெயர் அமைப்புக்களே கூடுதலான பங்களிப்பைச் செய்கின்றன. பல்வேறு நாடுகளுடன் அவர்களின் பேச்சுக்களை முன்னெடுக்கின்றனர்.

அதனால் அதிகார ரீதியாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக இவர்களைக் கைது செய்தல், அடைத்தல் போன்ற விடயங்களைக் கையாள அரசு முனைகின்றது - என்றார். (க-இ)



# ரஞ்சனை பார்வையிட ஒருநாள்

கொழும்பு, ஏப்.1

சிறையில் இருக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சந்திக்க வாராந்தம் ஒரு பார்வையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா,ரஞ்சன் ராமநாயக்கவுடன் சிறைக்குள் எடுத்த புகைப்படைத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது (ஐ-இ)

# சரணடைந்தவர்கள் தொடர்பான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

முல்லைத்தீவு,ஏப்.1

இலங்கையில் இறுதிப் போரின்போது, இராணுவத்திடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஆள்கொணர்வு மனு, மே மாதம் 17 திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மனு மீதான வழக்கு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்குத் தொடுநர்களும், அவர்கள் சார்பான சட்டத்தரணிகள் எவரும் வருகை தராத காரணத்தால் மீள வழக்குக்குத் திகதி அறிவிக்கப்பட்டது.

எழிலன் உள்ளிட்ட 12 பேர் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணைகள் கடந்த சில வருடங்களாக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தன.


எழிலன் உள்ளிட்ட ஐந்து பேர் தொடர்பான ஆள்கொணர்வு வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏனைய 7 பேர் மீதான வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடிந்து விழும் நிலையில் அரச வீட்டுத் திட்ட வீடுகள்

## முல்லை. மாதிரிக் கிராமம் ஒன்றில் இந்த நிலை

**முல்லைத்தீவு, ஏப்.1**
**முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட தச்சடம்பன் புதிய நகர் கிராமத்தில் அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடு ஒன்றின் கூரை உடைந்து வீழ்ந்துள்ளது.**




கடந்த 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் புதியநகர் கிராமம் என்ற மாதிரிக் கிராமம் ஒன்றில் 75 வீடுகள் அமைக்கப்பட்டு, மக்கள் மீள் குடியேற்றப்பட்டனர். மக்கள் குடியேறி 9 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் குறித்த வீடுகளின் சுவர்கள் வெடித்த நிலையிலும், கூரைகள் உடைந்து விழும் நிலையிலுமே காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது

இது தொடர்பில் அப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது;

இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றின் வீட்டின் கூரை உடைந்து வீழ்ந்துள்ளது. வீட்டுக்குள் எவரும் இல்லாததால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் தற்போதைய நிலை தொடர்பில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அனைத்து வீடுகளும் வெடிப்பு ஏற்பட்டு சுவர்கள் இடிந்து விழும் அபாயத்தில் உள்ளன.



சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (வ-19)



## பரிசளிப்பும் கௌரவிப்பும்

வவுனியா, ஏப்.1
தமிழர் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் வவுனியாவில் இடம்பெற்ற கோலப் போட்டியில் வெற்றி பெற்ற 9 பேருக்கு பரிசில்கள் வழங்கல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு குட்செட் வீதி ஸ்ரீ கருமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு பிரபாகரக் குருக்கள், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் ஆலய நிர்வாக சபையினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ய-18)

## நோய்கள் குணமாக விசேட வழிபாடு

கிளிநொச்சி, ஏப். 1
உலகில் வாழும் அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இறை ஆசி வேண்டி இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் மஹோற்சவக் குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரிசங்கரக்குருக்கள் மற்றும் ஆலயப் பூசகர் கனகசபை ஆகியோரின் உரையும் வே தபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ய)

## பயணிகள் சேவையில் பாவனைக்குதவாத பஸ்;

### தவறுக்கு வருத்தியது மன்.சாலை நிர்வாகம்

மன்னார், ஏப். 1
மக்கள் பாவனைக்கு உதவாத பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்தியமைக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை நிர்வாகம் வருத்தம் வெளியிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு பாவனைக்கு உதவாத பஸ் ஒன்று மன்னார் சாலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

கிழிந்த பராமரிப்பற்ற இருக்கைகள், உடைந்த கண்ணாடிகள் என துப்புரவு செய்யப்படாத நிலையில் அந்த பஸ் காணப்பட்டது. இது தொடர்பாக பயணிகள் முகநூல் வழியாகவும் ஊடகங்கள் வழியாகவும் தங்களுடைய அதிருப்தியை தெரிவித்திருந்தார்கள். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலைக்கு நேரில் சென்று பஸ் வண்டிகளைப் பார்வையிட்டார். நிர்வாகத்தினரிடம் இது தொடர்பான விளக்கத்தையும் கோரியிருந்தார். இதன் போது தங்களுடைய தவறை ஏற்றுக்கொண்ட மன்னார் சாலை நிர்வாகத்தினர் குறித்த பஸ்ஸை இனி பாவனையில் ஈடுபடுத்த மாட்டோம் என்றும் முடிந்த வரை பஸ்கள் சீர்செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் உறுதி அளித்தனர். (வ-213,56)





## திருவையாறு மாணவர்க( ) மரக்கன்றுகள் வழங்கல்

கொடிகாமம், ஏப்.1
வன்னித் தமிழ் மக்கள் ஒன்றிய பசுமைப்புரட்சி செயற்றிட்டத்தின் ஊடாக கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. இதன்போது, மரநடுகையின் பயன்கள் மற்றும் இயற்கை சார் விட யங்கள் தொடர்பான விழிப்பு ணர்வுக் கருத்தமர்வும் நடை பெற்றது. இந்த நிகழ்வில் சமூக செயற்பாட் டாளர்கள் சோமிலன், அயந்தன் மற்றும் ஒன்று கூடுவோம் இலங்கை அமைப் பின் கிளிநொச்சி யாழ். மாவட்ட இணைப்பாளர் நக்கீரன் சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ய-159)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

வவுனியா,ஏப்.1
சிதம்பரம் அறக்கட்டளை ஊடாக வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பெற்றோரை இழந்த 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ச. பிரியதர்ஷினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தன், விளையாட்டு உத்தியோகத்தர் விந்துயன், குத்துச் சண்டைப் பயிற்றுவிப்பாளர் எம். நிக்சன் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-110)

## 5 சமூக சேவையாளர்களுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கல்

### கௌரவப்படுத்தியது அமெரிக்கா

முல்லைத்தீவு, ஏப்.1
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர்கள் ஐந்து பேருக்கு அமெரிக்கா உலகத்தமிழ் பல்கலைக்கழகம் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக சேவைகளில் ஈடுபடும் க.திருக்குமரன்,பொ.பேரின்பநாயகம்,சி.சிவபாலகுரு,ஜெகன் மற்றும் தர்சினி ஆகியோருக்கே கடந்த 27ஆம் திகதி கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா நட்சத்திர விடுதியில் வைத்து இந்த பட்டம் வழங்கப்பட்டுள்ளது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவரங்கால் ஒன்றியம் பிரித்தானியா மற்றும் ஆவரங்கால் மத்திய நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் பங்களிப்புடன் நேற்றுமுன்தினம் ஆவரங்கால் சிவன் தேவஸ்தான மண்[illegible] குருதிக்கொடை முகாம் [illegible] இடம்பெற்றது. (ச)

## இன்றைய நாள்



**மேடம்:** திறமைக்கேற்ற நன்மை பெற்று பெருமை அடைவீர்கள். குடும்பத்தினருக்கு ஏற்பட்டிருந்த மருத்துவச் செலவுகள் தீரும். விரைந்து செயல்பட்டுத் தேங்கிய பணிகளை முடிப்பீர்கள்.

**இடபம்:** சுறுசுறுப்புடன் செயற்பட்டு பணிகளை நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியத்தில் சோர்வு ஏற்படுவது போல் தோன்றினால் அது கற்பனையே. வருத்தங்கள் விலகும்.

**மிதுனம்:** பிரச்னையைப் பேசித் தீர்ப்பதன்மூலம் நிம்மதி வரும். உறவினர்களிடையே ஏற்படும் சண்டையைத் தீர்ப்பீர்கள். உற்சாகமாகப் புதுமை படைப்பீர்கள். பணியாளர் சுமைகள் தீரும்.

**கடகம்:** பயமுறுத்தும் பேச்சும், அவசரமான செயல்களும் வேண்டாம். வேகமான முடிவுகளை எடுக்காமல் நிதானமாக சிந்தியுங்கள். உற்சாகத்துடன் எதிலும் புகுந்து கலக்கும் ஆற்றல் வரும்.

**சிம்மம்:** நண்பர் சண்டையில் இதமாகப் பேசி மத்தியஸ்தம் செய்வீர்கள். உறவினர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்ள வாய்ப்பு வரும்.

**கன்னி:** பணியிடத் திறமைகளை நன்கு வளர்த்துக் கொள்வீர்கள். மனதில் கற்பனை விரிவடையும். பொதுவாழ்வில் ஈடுபடுவீர்கள். வருந்தும் நண்பர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவீர்கள்..

**துலாம்:** ருசித்து உண்ணும் வாய்ப்பு வரும். வருத்தங்கள் தீரும். பணியிடத்தில் செயல்களைத் திறம்படச் செய்யும் ஆற்றல் வரும். அன்பளிப்பு வரும். எதையும் அமைதியாக எதிர்கொள்வீர்கள்.

**விருச்சிகம் :** பணியாளர்களுக்கு முன்பிருந்த தொல்லைகள் அகலும். பணத் தேவைகள் நிறைவடையும். மதிப்புக் கூடும். எடுத்த முயற்சி வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும்.

**தனுசு:** படிப்படியாகப் பிரச்னைகளிலிருந்து வெளியே வருவீர்கள். கனவு நனவாகும். வெற்றிக்கு உடன் பிறப்புகள் உதவுவர். முயற்சிகளில் மாற்றம் செய்து நன்மை அடைவீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் நன்மைக்கான முயற்சிகளில் வெற்றி உண்டு. திறம்பட செயற்பட்டு அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எதிர்பார்க்கும் ஊதிய உயர்வு, இடமாற்றம் கிடைக்கும்.

**கும்பம்:** சொந்தமாக வீடு, வாகனம் வாங்கத் திட்டம் தீட்டி மகிழ்வீர்கள். சிறு லாபம் உண்டு. எடுக்கும் முயற்சி ஒன்று வெற்றி தரும். பணியிட சகாக்களுடன் முன்பைவிட ஒற்றுமை பலப்படும்.

**மீனம்:** எதிர்ப்பை எதிர்கொள்ளத் தயாராவீர்கள். வீண் பழி நீங்கும். யாரைப் பற்றியும் யாரிடமும் புரளி பேச வேண்டாம். அவசரப் பேச்சினால் பிரச்னையில் மாட்டாமல் இருக்கப் பாருங்கள்.

# இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் போராளிகள் கட்சி சந்திப்பு





மட்டக்களப்பு,ஏப்.1

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுக்கும், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி அலுவலகத்தில் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையா டலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டு அம்பாறை ஊடகப் பேச்சாளர் சாந் தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்வரும் தேர்தலுக்கு முகங்கொடுத்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டன் தொடர்ச்சியாக இணைந்து செயற்படுதல், ஐ.நா. வில் நிறை வேற்றப்பட்ட இலங்கை குறித்தான தீர்மானம், முன்னாள் போராளிகளின் அரசியல் செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ஐ-150)

## விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி, ஏப்.1

கிளிநொச்சி அறிவியல்நகரில் இயங்கிவரும் ஜேர்மன் தொழில் நுட்பக்கல்லூரியில் 2021 ஆம் ஆண்டுக்கான இரண்டு வருட முழுநேரக் கற்கைநெறிக்களுக்காக மாணவர்கள் இணைத்து கொள்ளப்படவுள்ளனர்.

16 வகையான தொழில்நுட்ப பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்திபெற்றிருப்பதோடு, 16-24 வயதுக்குட்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் கற்கைநெறிக்கு வரும் மாணவர்களின் வருகை நாள் பாசிலணையின்படி வரவுநாள் கொடுப்பனவு 4ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-12)



தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா முன்பள்ளியில் கல்வி பயிலும், மாணவர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நிலையத் தலைவர் உ. தயசூரியன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினா ச.ஜயந்தன் கலந்து கொண்டார். (ப)

## தவக்கால சிந்தனை

### இயேசுவின் பணியை தொடர்வோம்

அன்பு, அடக்கம், சீடத்துவம், தியாகம், அர்ப்பணிப்பு, மன்னிப்பு, இறைசித்தம் போன்ற பொறிமுறைகளைப் பல்வேறு கோணங்களிலும் போதித்த இயேசு அதனை நிகழ்த்திக்காட்டிய உன்னத நாள் இன்றைய புனித வியாழன் தினமாகும். இது திவ்விய நற்கருணையையும் குருத்துவத்தையும் ஏற்படுத்திய மகத்தான நாளாகும். ஆண்டவரும் போதகருமாகிய இயேசு இறுதி இராவுணவின் போது சீடர்களின் பாதங்களைக் கழுவி 'நீங்களும் ஒருவர் மற்றவருடைய பாதங்களைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்' என்றார்.

இயேசுவின் காலத்தில் செல்வமும் செல்வாக்கும் மிகுந்தவர்களின் இல்லங்களுக்கு வரும் விருந்தாளிகளின் காலடிகளைக் கழுவிட அடிமைகள் அமர்த்தப்பட்டிருந்தனர். இதனால் தாமே அடிமையாகி பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவே வந்தேன் என இயேசு நிரூபித்துக் காட்டினார். இது உங்களுக்காக பிட்கப்பட்டு சிந்தப்படுகின்ற எனது உடலும் இரத்தமுமாகும்.

இதை என் நினைவாகச் செய்யுங்கள் என கிறிஸ்தவ எழுச்சியின் உச்சமாகிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

என்னையே நான் உடைத்துக் கொள்கின்றேன்.

அப்படியென்றால் நீங்களும் எப்போதெல்லாம் உங்களையே சிதைத்து அப்பணித்து மனித எழுச்சியின் புதிய சகாப்தத்துக்கு நொறுக்கிக் கொள்கிறீர்களோ. அப்போதெல்லாம் என் பிரசன்னத்தை நிலைநாட்டுகிறீர்கள் என அழைகின்றார். இயேசுவின் பணியைத் செ[illegible]ோம்

[illegible]
[illegible]ொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவின் தீர்மானம் சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடாது

## சர்வதேசத்தைக் கோரினார் மங்கள



கொழும்பு,ஏப்.1

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கைக்கு எதிராக தனிப்பட்ட ரீதியில் நாடுகளால் தடை விதிக்க முடியும். எனவே சாதாரண மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்திலான தடைகளை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சர்வதேச நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போரின் போது சர்வதேச சட்டதிட்டங்கள் மீறப்பட்டனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக பொறிமுறையொன்று உருவாக்கப்படும் என்று ஐ.நா. பொதுச்செயலாளருக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2009 ஆம் ஆண்டில் உறுதியளித்திருந்தார்.


இவ்வாறு வழங்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு, ராஜபக்ச அரசு நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே 2012 ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பாக 2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்படவிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் அதிஷ்டவசமாக 2015 ஆம் ஆண்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது.

30/1 தீர்மானத்திலுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிந்தே வைத்திருந்தார். அவர் அனுமதிகூட வழங்கியிருந்தார். தீர்மானத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் நானே அவருக்கு எடுத்துரைத்தேன். நாட்டுக்கு ஏற்படவிருந்த பெரும் பாதிப்பை தடுத்து, ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை, மீன் ஏற்றுமதிக்கான தடை நீக்கம் போன்றவற்றை வென்றோம். அப்படி இருந்தும் தேசத்துரோக முத்திரை குத்தப்பட்டது.

அதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தற்போதும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளது. விசாரணைகளுக்கான சாட்சியங்களை திரட்டுவதற்கு குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு வரை காலம் உள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் தடை விதிக்க முடியாது. எனினும், நாடுகளால் தனிப்பட்ட ரீதியில் தடைகளை விதிக்கமுடியும். எவ்வித குற்றமும் இழைக்காத சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் எந்தவொரு தடையையும் விதிக்க வேண்டாம் என்று சர்வதேசத்திடம் கேட்டுக்கொள்கின்றேன்.

போர்க்குற்றங்கள் இடம்பெற்றனவா என்பது எமக்குத் தெரியாது. இடம்பெற்றுள்ளன என்று எவரும் கூறவில்லை. இடம்பெற்றுள்ளன என்ற குற்றச்சாட்டே முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, அது போர்க் குற்றமா அல்லது எந்த வகையான குற்றம் என்பதை விசாரணை நடத்தினால் தான் கண்டறியமுடியும்." என்றார். (க-44)



கொரோனா தடுப்பு பிரிவுக்கு

## கொமர்ஷல் வங்கியால் அலுவலக உபகரணங்கள்

கிளிநொச்சி, ஏப்.1

கொமர்ஷல் வங்கியின் கிளிநொச்சிக் கிளையால் கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கொரோனாத் தடுப்புப்பிரிவுக்கு அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கொமர்ஷல் வங்கியின் சமூகப்பொறுப்பு நிதியத்தினூடான பங்களிப்பால் நேற்று அந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ப-113,6)

## இலங்கையின் சமகால நிலை தொடர்பில் கனடா கரிசனை

கொழும்பு,ஏப்.1

இலங்கையின் சமகால நிலைமைகள் தொடர்பில் ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ள கனடா. தமிழ் அமைப்புக்கள் மீதான தடைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனடாவின் எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான நிழல் அமைச்சர் மைக்கல் சொங் மற்றும் சர்வதேச அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளுக்கான நிழல் அமைச்சர் கார்னட் ஜீனியஸ் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மனித உரிமைகள் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீதான பயணத்தடையை கனடா விதிக்க வேண்டும். கனடாவில் நடைமுறையில் உள்ள சட்ட விதிகளின் பிரகாரம் அதனை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும். 2019 ஆம் ஆண்டில் இறுதியாக நடைபெற்ற தமிழர் இனப்படுகொலை குறித்து, சுயாதீன சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்றத் தீர்மானம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கடந்த காலங்களை விட முன்னேற்றகரமாக அமைந்தாலும், இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் மீதான சுயாதீன சர்வதேச விசாரணையையோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல விடயங்களையோ அது உள்ளடக்கவில்லை. ஐ.நா. தீர்மானத்தைக் கடந்து கனடா உட்பட சர்வதேச சமூகம் தமது அடுத்த கட்ட நடிவடிக்கைகளை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம். என்றுள்ளது. (க-இ)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ்ப்பாணம், அரியாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை அரியாலை சனசமூகநிலையம் புங்கன்குளம் வீதியிலும், 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை பென்ரிகோஸ் லேனிலும்,பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தியாகராசா படிப்பகம் கண்டி வீதி அரியாலை ஆகிய இடங்களிலும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை அரியாலை சனசமூக நிலையத்திலும், 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மிருக வைத்திய நிலையம் ஏ.வி. வீதியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பிரப்பாங்குளம் அம்மன் கோவிலடி இலந்தைக்குளம் [illegible] ஏற்றப்படும் [illegible]



## தபால் ஊழியர் போராட்டம்; வடக்கிலும் சேவைகள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.1

நாடு தழுவிய ரீதியில் தபால் திணைக்கள ஊழியர்கள், நியமனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்துள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தால் வடக்கு மாகாணத்திலும் தபால் திணைக்களத்துடன் தொடர்புடைய சேவைகள் நேற்று பாதிப்புக்குள்ளா கின.

பொதுவாக மின்கட்டணம் மற்றும் தண்ணீர் கட்டணம் கடிதங்கள் பரிமாற்றல் சேவை உட்பட பல்வேறு சேவைகளை இலகுவாக தபால் திணைக்களத்தின் ஊடாகவே பொதுமக்கள் செய்துவருகின்றனர். இந்நிலையில் முல்லைத்தீவு, [illegible] புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் தபால் அலுவலகங்களுக்கு நேற்று வருகை தந்த பொது மக்கள் தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான தபாலகங்களில் சேவைகள் நிறுத்தப்பட்டதால் தபால் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளவேண்டிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது மக்கள் சிரமங்களை எதிர்கொண்டமையை அவதானிக்க முடிந்தது. உப தபால் அலு வலகங்கள் வழமைபோன்று இயங்கினாலும் பிரதான தபால் அலுவல கங்கள் பூட்டப்பட்டதால் [illegible] முன்னெ[illegible] இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-19,6)

## தவறான முடிவெடுத்து மாணவி உயிர்மாய்ப்பு

சாவகச்சேரி,ஏப்.1

தவறான முடிவெடுத்து 17 வயது மாணவி ஒருவர் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி கோயிற்குடியிருப்பில் இடம்பெற்றது.

மாணவியின் சடலம் உறவினர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. மாணவியைப் பரிசோதனை செய்த மருத்துவர் ஏற்கனவே அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். சடலம் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகிழ்ச்சி என்பது யாதெனில்!

ஃபஜிலா ஆசாத்,
*சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்*

எவ்வளவுதான் இன்று முழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஒரு முடிவோடு எழுந்தாலும், அந்த மகிழ்ச்சிக்கு இடையூறாக ஏதாவது ஒன்று நடக்கிறது அல்லது யாராவது வந்து நிற்கிறார்கள். என்னைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும் போது, ஏன் எனக்கு மட்டும் மகிழ்ச்சி என்பது எப்போதும் எட்டாக் கனியாகவே இருக்கிறது?. காரணம் என் வாழ்க்கை, என் மகிழ்ச்சி என்னை மட்டும் சார்ந்தது இல்லை என்று நாம் பிடிவாதமாய் நம்புகிறோம். நாம் எவ்வளவு தான் சந்தோசமாக இருக்க ஆசைப்பட்டாலும், நம் சுற்றம், நட்பு, சுற்றுச் சூழல், இப்படி பல விஷயங்கள், நாம் அறிந்தும் அறியாமலும் எம்மை அதன் போக்கிலே இழுத்துச் செல்ல அனுமதிக்கின்றோம்.

பணம், ஆரோக்கியம், வேலை, புகழ், அந்தஸ்து, நிம்மதி இப்படி ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் மகிழ்ச்சியைத் தேடி, அலைந்து, ஒன்றல்ல இரண்டல்ல, '79' சதவீத மக்கள் மகிழ்ச்சியற்றுத் தவிக்கிறார்கள் என்கிறது ஆசியா வட்டகையில் நடந்த ஆய்வு ஒன்று.

மகிழ்ச்சி என்பது பலூன் இல்லை. யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் உடைத்து விட்டுப் போவதற்கு. மகிழ்ச்சி என்பது நம்மோடு இயைந்து, நம்மை இயக்கிக் கொண்டு எப்போதும் எம்முடனேயே இருக்க வேண்டிய எம் மூச்சுக் காற்று.

இயற்கை நமக்கு மகிழ்ச்சியை மூச்சுக் காற்றாய் தான் வைத்திருக்கிறது. அதனால் தான் அது குறையும் போது, மூச்சுத் திணறுவதாய் நமக்குப் பெரு மூச்சு வருகிறது. நாம் கொஞ்சம் தெளிவாக இருந்தால், நம் பார்வை கொஞ்சம் மாறினால், எந்த சூழ் நிலையிலும் நம்மால் மகிழ்ச்சியை விட்டுக் கொடுக்காமல் இருக்க முடியும். இல்லையென்றால், எந்தச் சூழலாலும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தர இயலாது என்கிறது உளவியல்.

### எமது மகிழ்ச்சியென்பது எமது கைகளில்தான்

அது ஒரு பெரிய குடும்பம். மாமா, மாமி, அத்தை, சித்தி, சித்தப்பா, பிள்ளைகள், என குடும்பமே சேர்ந்து கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கலாமே என பல நாள்கள் திட்டமிட்டு அன்று சுற்றுலா போகிறார்கள். முழு நாளும் குதூகலமும், சந்தோஷமுமாக நகர்கிறது. விதவிதமான உணவுகள், போட்டிகள், கிண்டல், கேலி, இளசுகளின் பார்வை பறிமாற்றம், என அற்புதமாய்க் கழியும் அந்த நாளின் இறுதியிலே, சிறு கல் தடுக்கி ஒரு குழந்தை விழ, அது வரை தேடிய மொத்த சந்தோஷமும் அந்தக் குழந்தையுடன் விழுந்து விடுகிறது. கலகல என்று இருந்த அந்த இடமே சலசலத்து, இறுக்கமாக மாற கனத்த உள்ளத்தோடு. ஒருத்தரை ஒருத்தர், நிகழ்வுக்கு காரணமாய் கை காட்ட, அந்த மொத்த குடும்பமும் தேடி வந்த மகிழ்ச்சியை, தொலைத்து விட்டு புதிய கவலையோடு திரும்புகிறது. இது தான் மகிழ்ச்சி என தேடிப் போன மகிழ்ச்சி அவர்களுக்கு கிடைத்ததா? கிடைத்தால் ஏன் அவ்வளவு எளிதில் அதை தொலைத்து விட்டு மகிழ்ச்சியின்றி திரும்புகிறார்கள்?!

பொதுவாக மகிழ்ச்சியை ஒரு மூச்சுக் காற்றாய், எம் மனதிலே நாம் தேக்கி வைக்கும் போது, ஒரு பற்றோடு வாழ்வோம். நாம் விரும்பியதை செய்வோம். அன்றி, மகிழ்ச்சியை ஏதாவது ஒன்றில் தேடும் போது, அதை நோக்கிய அந்த பயணத்திலேயே சோர்ந்து போய் விடுகிறோம். அல்லது அந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்திலே ஏதாவது ஒரு பிரச்சினை வந்தாலும், அப்படியே உடைந்து போய் விடுகிறோம். முடிவில் எம்மையே நாம் இழந்தும் விடுகிறோம்.

### மகிழ்ச்சி எங்குள்ளது?

அந்த சின்னஞ் சிறு குருவிக்கு அன்று ஒரு அழகிய கனவு வந்தது. கனவில் மிக அழகான ஒரு உலகம் தெரிந்தது. இதுவரை குருவி அப்படியொரு அற்புத உலகத்தைப் பார்த்ததில்லை. வண்ண வண்ண விளக்குகள், அழகான நதிகள், மரங்கள், எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி என்று அந்த அற்புத உலகம் மயக்கியது.

எப்படியாவது அந்த உலகத்துக்குப் போயே ஆக வேண்டும். அந்த சந்தோஷங்களை அனுபவித்தே ஆக வேண்டும் என்று அந்த குருவி விரும்பியது. ஆனால் போகும் வழி தான் அதற்குத் தெரியவில்லை. அது பறந்து போகும் போது ஒரு பிரபல ஜோதிடரைப் பார்த்து வழி கேட்டது. 'எனக்கு முழு விபரம் தெரியாது. தெரிந்த வரை சொல்கிறேன். அதற்கு விலையாக நீ உன் சிறகுகளில் ஒன்றைத் தர வேண்டும்' என்றார் ஜோதிடர்.

ஒரேயோரு சிறகுதானே என்று குருவியும் சரி என்று கொடுத்து விட்டு, அவர் சொன்ன வழியில் பறந்து சென்றது. குறிப்பிட்ட இடத்துக்கு மேல் அது வழி தெரியாமல் திகைத்து நிற்க, அந்த வழியே வந்த பாம்பிடம் வழி கேட்டது.

பாம்பும், 'எனக்கு தெரிந்த வரை சொல்கிறேன், பதிலுக்கு நீ உன் அழகான சிறகில் ஒன்றைத் தருவாயா?' என்றது. இன்னொரு சிறகுதானே, கொடுத்தால் போச்சு என்று குருவியும் சம்மதித்தது. இப்படியே அந்தக் குருவி, அற்புத உலகின் சந்தோஷங்களை அனுபவிக்கப் போகும் ஆசையில் வழி சொன்னவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு சிறகாக பிய்த்துக் கொடுத்தபடி சென்றது.

முடிவாக, அதோ.... கனவில் கண்ட அந்த அழகான உலகம், அதன் கண் முன் தெரிந்தது. வந்து விட்டோம்... வந்தே விட்டோம்... இன்னும் சில நூறடி தூரம் பறந்தால் அந்த அற்புத உலகம். குருவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஆனால், இதென்ன.... ஏன் என்னால் பறக்க முடியவில்லை. ஐயோ, என் உடம்பெல்லாம் கனக்கிறதே. கீழே இருந்து காற்றில் எழும்பவே முடியவில்லையே என்று திடீரென குருவி கதறியது.

மெல்ல மெல்ல குருவிக்கு உண்மை புரிந்தது. பறப்பதற்கான சிறகுகளை ஏதோ ஒரு தேடலில், வழி நெடுகிலும் பிய்த்துக் கொடுத்து, எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்று அறியாமலே, ஒவ்வொன்றாக சிறகு சிறகாக இழந்து, இப்போது பறக்க முடியாமல் முடமாகிப் போய் விட்டோம் என்ற உண்மை விளங்கியது.

இது தான் சந்தோஷம் என்ற ஏதோ தேடலில் உண்மையில் நம்மிடம் இருக்கும் சந்தோஷங்களை நம்மையுமறியாமலேயே இழந்து கொண்டிருக்கிறோம். கடைசியில் நாம் மகிழ்ச்சி என்று தேடிய ஒன்று கிடைக்கும்போது, நரை கூடி, திரை வந்து, உடலும் மனசும் தளர்ந்து, எல்லாம் இருந்தும், அனுபவிக்க முடியாத நிலைக்கு பெரும்பாலும் தள்ளப் படுகிறோம்.

உண்மையில் சந்தோஷம் என்பது சட்டென்று பற்றிக் கொள்ளும் ஒரு தொற்று. மகிழ்ச்சியாக இருக்கிற ஒருவரால் தான் மற்ற வருக்கு மகிழ்ச்சி கொடுக்க முடியும்.





## 199 பேருக்கு தனிமை நிறைவு

யாழ்ப்பாணம், ஏப்.1

விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 199பேர் இரண்டு வாரத் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து நேற்று முன்தினம் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சவூதி அரேபியா, அமெரிக்கா, குவைத், ஓமான் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த 199 பேரே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். (வ-20)





## சமுர்த்தி அலுவலர்களின் சம்மேளனக் கூட்டம்

மன்னார், ஏப். 1

மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 2021 ஆம் ஆண்டுக்கான தொழிற்சங்க சம்மேளனக் கூட்டம் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகரசபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சம்மேளனக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக தேசிய தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளரும் பொது ஜன பெரமுன கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகத் கலந்து கொண்டு விசேட உரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட ரீதியில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (வ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் கொண்டுவந்த பிரேரணைக்கு தந்தை செல்வாவின் அர்ப்பணிப்பே காரணம்

## மாவை. சோ.சேனாதிராசா தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஏப்.1**

**தந்தை செல்வா காட்டிய அர்ப்பணத்தின் பயனாகவே இன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிறுவுநர் தலைவர் தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் 123 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றன. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எத்தனையோ சத்தியாக்கிரகப் போராட்டங்களைச் சந்தித்த வரலாற்று நாயகன் தந்தை செல்வா ஆவார். 1956 ஆம் ஆண்டு காலிமுகத்திடலிலே எமது இனத்தின் விடுதலைக்காகவும், மொழியின் சமத்துவத்துக்காகவும் அவர் குருதி சிந்திய வரலாறு இன்று வரையிலும் எமது நினைவுகளில் இருக்கின்றது.

அகிம்சை வழியிலும், ஆயுத ரீதியிலும், எமது லட்சக் கணக்கான மக்களைப் பறிகொடுத்தும் இன்னும் அந்த விடிவை நாங்கள் எட்டவில்லை. எமது மக்களின் விடிவை நோக்கி நாங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றோம், போராடிக் கொண்டிருக்கின்றோம். அந்த இலக்கை அடைவதற்காக இன்று தேசத்தின் விடுதலைக்காகவும், எமது இனத்தின் விடுதலைக்காவும் சர்வதேச அரங்கிலே தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

எமது நிகழ்ச்சிகளின் முன்னோடியாக, எமது தந்தை செல்வா காட்டிய அர்ப்பணிப்பின் பயனாகவே இன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அது தமிழ் மக்களுக்கு ஒரு மனப் பலத்தை அளித்திருக்கின்றது. -என்றார்.

(ஐ-150)

# ஊடகவியலாளர் மீதான வழக்கு ஒத்திவைப்பு



முல்லைத்தீவு, ஏப்.1

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் ஒருவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜுலை மாதம் 27 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தின்போது, ஊடகவியலாளர்களுக்கு இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் தலையிட்டு அவரை விசாரித்த போது தான் கடற்படை அதிகாரி என்று தெரிவித்துள்ளார்.

குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களைப் பழிவாங்கும் நோக்கில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதனையடுத்து ஊடகவியலாளர் அழைக்கப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வழக்கு திகதி தவணையிடப்பட்டது. (க-19)

# பழமைவாய்ந்த மரம் சட்டவிரோதமாக தறிப்பு

## பரிபாலன சபையினருக்கு எதிராக வழக்கு



வவுனியா, ஏப் 1

வவுனியா வைரவப் புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய வளாகத்தில் காணப்பட்ட பழமை வாய்ந்த மதுரமரம் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது.

வவுனியா வைரவப் புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயம், ஆரம்ப காலம் தொட்டு குறித்த மதுரமரத்தின் கீழே அமையப்பெற்றிருந்தது.

இந்த நிலையில் தேர்த் திருவிழா காலங்களில் தேர் ஓடும் வீதியில் இம்மரம் இடையூறாகக் காணப்படுகிறது எனவும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே தேரை இழுக்க வேண்டி உள்ளது எனவும் தெரிவித்து கடந்த திங்கட்கிழமை ஆலய பரிபாலனசபையினரால் இந்த மரம் வெட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதி மக்களால் கிராம அலுவலருக்கு தகவல் வழங்கப்பட்டதுடன், வவுனியா பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து ஆலய பரிபாலன சபையினருக்கு எதிராக வவுனியா பொலிஸாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ச-110)

# மஞ்சள் அறுவடை

ஜனாதிபதியின் சௌபாக்யா திட்டத்தின் கீழ் முள்ளிப்பொத்தானை கமநல சேவைகள் அபிவிருத்தி நிலையத்தின் 228B விவசாய ஆராய்ச்சி உற்பத்திப் பிரிவில் மஞ்சள் அறுவடை செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது நேற்று உரிய விவசாய ஆராய்ச்சி உற்பத்தி பிரிவின் பொறுப்பதிகாரி எம்.எஸ். அப்துல் ஹலீம் தலைமையில் பரகும்புற பகுதியில் இடம் பெற்றது.



கமநல சேவைகள் அபிவிருத்தி நிலையத்தின் மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.வருணி மஞ்சள் அறுவடையை ஆரம்பித்து வைத்தார். (ய-40)

வவுனியாவில்

# தந்தை செல்வாவின் ஜனனதினம் கடைப்பிடிப்பு



வவுனியா, ஏப்.1

தந்தை செல்வாவின் 123ஆவது ஜனனதின நிகழ்வுகள், வவுனியா மணிக்கூட்டுக்கோபுர சந்திக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் வவுனியா நகர சபை உறுப்பினர் நா.சேனாதிராசா திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

(ச-110)

**பெரிய வியாழன் நிகழ்வு இன்று**

ஓமந்தை பறண்நட்டகல் புனித அடைக்கல மாதா கோவிலின் பெரிய வியாழன் நிகழ்வுகள் இன்று மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-110)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 02.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிய நிர்வாகக் குழுவிற்கான வேட்புமனுப் பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் எமது www.jhcobajaffna.com எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. அ.கஜேந்திரன் (செயலாளர்)

JHC-OBA-2020/2021 01.04.2021



## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 01 . 1939



இறப்பு 31 . 03 . 2021

**மரியாம்பிள்ளை அலோசியஸ் ஞானப்பிரகாசம்**

**(தொழில்நுட்ப உதவியாளர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)**

யாழ்ப்பாணம் மார்டீன் வீதியை பிறப்பிடமாகவும் இல.106B ஜெயந்திநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அலோசியஸ் ஞானப்பிரகாசம் நேற்று (31.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டார் பணியாளர்களுக்கு 1000 ரியால் சம்பளம்

கொழும்பு, ஏப்.1

கட்டாரில் பணியாற்றும் சகல பணியாளர்களுக்கும், குறைந்த பட்சமாக ஆயிரம் ரியால் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று சர்வதேச தொழில் அமைப்பின் கட்டாருக்கான அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனை இலங்கைக்கான கட்டார் தூதுவராலயமும் உறுதிப்படுத்தியுள்ளது. இதனால் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயித்த முதலாவது மத்திய கிழக்கு நாடாக கட்டார் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பள முறைமை கட்டாரில் பணியாற்றும் சகல நாடுகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் உரியதாகும். நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் பணியாற்றுபவர்களும் இந்த சம்பளக் கட்டமைப்பில் உள்வாங்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறைந்தபட்ச சம்பளமாக ஆயிரம் ரியால் வழங்குவதுடன், தொழிலாளர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இந்த வசதிகளை வழங்காதுவிடத்து, அதற்காக மேலதிக கொடுப்பனவுகளை ஒதுக்க வேண்டும் என்று சர்வதேச தொழில் அமைப்பின் கட்டாருக்கான அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (க-இ)

# தொழில் சார் பட்டப்படிப்புக்கு 10,000 மாணவர்கள் இணைப்பு

கொழும்பு, ஏப்.1

**2025 ஆம் ஆண்டுக்குள் தகவல் தொழில்நுட்பத் துறையில் 2 லட்சம் பேரை இணைத்துக் கொள்வதை இலக்காகக் கொண்டு, கணினித் தரவு அறிவியல் மற்றும் மென்பொருள் பொறியியல் (Data Science, Software Engineering) தொடர்பான புதிய தொழில் வாய்ப்பு சார்ந்த பட்டப்படிப்புக்கு, பத்தாயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.**

இந்தத் தகவலை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி அஜித் ஜீ மதுரபெரும தெரிவித்துள்ளார்.

தற்போதைய தகவல் தொழில்நுட்பத்துறைக்கு ஏற்றவாறு, இந்தக் கற்கை நெறி திருத்தப்பட்டுள்ளது. இதனை இணைய வழி தொழில்நுட்பத்தின் மூலம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதியுடன் நிறைவடையும்.

எதிர்வரும் ஜுன் மாதம் முதல் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை www.ou.ac.lk/bsehons மற்றும் www.vgc.ac.lk. என்ற இணைய தளங்களில் பதிவிறக்கம் செய்துக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# 6,000 வாள்கள் இறக்குமதி; விசாரணைக்கு இரு குழுக்கள்

கொழும்பு, ஏப்.1

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படும் 6 ஆயிரம் வாள்கள் தொடர்பான விசாரணைக்கு, இரு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன் போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி அவந்தி பெரேரா இதனைத் தெரிவித்தார். பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் அடிப்படையில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்ன கொரயா ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (க-இ)

## போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது



கொழும்பு, ஏப்.1


போலியான 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களுடன், சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பு, புளுமெண்டல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், வெல்லம்பிட்டி மற்றும் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் 7 கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பண்டிகைக் காலங்களில் போலி நாணயத்தாள்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். (க-இ)

## பசறையில் மற்றொரு விபத்து



பசறையில் மேலுமொரு வாகன விபத்து, நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது. இவ் விபத்தில் இருவர் கடுங்காயங்களுக்குள்ளாகியதுடன், வாகனச் சாரதி ஆபத்தான நிலையில் உள்ளார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. பசறையிலிருந்து பதுளையை நோக்கி, பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்று, பசறை பால்சபைக்கு அருகாமையில், பாதையை விட்டு விலகி, சுமார் நூறு அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (வ-இ)

## ஹெரோய்ன் கஞ்சாவுடன் ஐவர் கைது

கொழும்பு, ஏப்.1

ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் ஐவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பிலியந்தலை, கல்கிசை, அங்குலான மற்றும் கதிர்காமம் பிரதேசங்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பிலியந்தலை, கல்கிசை, அங்குலானவில் கைதானவர்களிடம் 9 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. கதிர்காமம் பிரதேசத்தில் கைதானவரிடம் 6 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## சூழலுக்கு பாதிப்பெனில் 1997 க்கு அழைக்கலாம்



கொழும்பு, ஏப்.1

சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் நடந்து கொள்பவர்கள் தொடர்பான தகவல்களை 1997 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தால் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் தொடக்கம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



ஊடகவியலாளர் ராதாமேத்தாவின் 'உள்ளத்தில் வைப்போமா' நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிறன்று கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் புரவலர் புத்தகப்பூங்கா நிறுவுநர் ஹாசிம் உமர் பிரமுகர்களுக்கு நூற் பிரதிகளை வழங்கினார். (க)

## கட்டுரைப் போட்டி

கொழும்பு, ஏப்.1

'புதிய அலை' கலை வட்டம் நடத்தி வரும் எவோட்ஸ் 2021 கலை,கலாசாரப் போட்டித் தொடரின் 4 ஆவது போட்டியாக கட்டுரை எழுதும் போட்டி நடத்தப்படவுள்ளது.


'பண்டிகைகள் தரும் படிப்பினைகள்' என்ற கருப்பொருளில் கட்டுரையை எழுதலாம். அனுப்பப்படும் கட்டுரைப் பிரதியில் சொந்தப் பெயர், புனைப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள், வங்கிக் கணக்கு இலக்கம் போன்ற விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் thapyhfhttps://www.facebook.com puthiyaalaikalaivaddam1980@gmail.com, puthiyaalaikalaivaddam1980@gmail.com என்ற முகவரிகளுக்கு ஆக்கங்களை அனுப்பலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0722780276, 0766249108 0776274099, 0777412604, என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

**சுப்பையா கணபதிப்பிள்ளை**

(ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவனும். முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும். இசைத்துறையின் மேதையும். சிறந்த நாடக நடிகரும். இசைத்-துறையை எங்கள் பகுதியிலே சிறந்த முறையில் கற்பித்தவரும். கற்பித்த ஆசிரியர்களை வழிநடத்தியவருமான திரு.சு.கணபதிப்பிள்ளை (கலாபூஷணம். சங்கீத பூஷணம்) அவர்கள் இறைபதமடைந்-தமையையிட்டு பழைய மாணவர் சங்கம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியுள்ளது. அன்னார் பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டவர்களில் ஒருவராவர். மிகுந்த ஓர் ஆலோசகராக திகழ்ந்தார்.

அன்னாரின் இழப்பு சகலருக்கும். குறிப்பாக இசைத்துறையினருக்கு பெரும் இழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பழைய மாணவர் சங்கம்,
யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

# மரண அறிவித்தல்



**திருமதி.சொர்ணம் கனகரத்தினம்**

இல.6/1. கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சொர்ணம் கனகரத்தினம் அவர்கள் நேற்று (31.03.2021) அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் திரு.திருமதி.சுவாமிநாதன் அவர்களின் அன்பு மகளும், அமரர் திரு.திருமதி.சதாசிவம் அவர்களின் அருமை மருமகளும், காலஞ்சென்ற சதாசிவம் கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சுமதி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுதாமதி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேஸ் (ஜேர்மனி), ரஜி (ஆசிரியை, யாழ்.இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், ஜஸ்மின் (மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே இல.077 725 6442**
**077 844 9592**
**077 327 6311**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**இராசையா கனகாம்பரம்**

(ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள உத்தியோகத்தர்)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| **24.01.1947** | **30.03.2021** |

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகாம்பரம் அவர்கள் நேற்றுமுன்தினம் (30.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தநாயகியின் அன்புக் கணவரும், சயந்தி (அவுஸ்திரேலியா), சஞ்சுளா (ஆசிரியர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), வினோதினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜமுகன் (அவுஸ்திரேலியா), கருணாகரன் (ஆசிரியர்- அச்சுவேலி, புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சதீஷ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகாம்பிகை (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் சகோதரனும், பூபாலசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), காலஞ்சென்ற குலநாயகம் மற்றும் இராசரத்தினம், பாலாம்பிகை, சரஸ்வதி, சத்தியபாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், துர்க்கா (அவுஸ்திரேலியா) தாருகா (அவுஸ்திரேலியா), சப்தவி, சகிஷன், ஆரன் (அவுஸ்திரேலியா), எழினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்சுவேலி, வடக்கு,**
**அச்சுவேலி.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**தொடர்புக்கு :0778383282**
**61470423136, 61433744472**

# ரஞ்சனுக்கு நீதி வழங்க கட்சிக்குள் பேசுவேன்

## அளுத்கமகேவுக்கு வந்தது சுடலை ஞானம்

கொழும்பு, ஏப். 1

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி வழங்க, ஆளுங்கட்சிக்குள் தனிப்பட்ட ரீதியில் முன்மொழிவொன்றை சமர்ப்பிக்கவுள்ளேன் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் தன்மீது ரஞ்சன் ராமநாயக்க அவதூறு தெரிவித்தார் என்று குற்றஞ்சாட்டி அவர்மீது நுகேகொட நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அவதூறு வழக்கை நேற்று அளுத்கமகே வாபஸ் பெற்றார். அதன் பின்னர் ஊடகங்களிடம் பேசிய அளுத்கமகே,

“ரஞ்சன் ராமநாயக்கவை மற்றவர்கள் தவறாக வழிநடத்தினர். அவர் ஓர் அப்பாவி. அவர் தவறாக வழிநடத்தப்பட்டு மற்றவர்களால் ப்யன்படுத்தப்பட்டார். அவரைத் தவறாக வழிநடத்தியதால், இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை பிரதிநிதித்துவப்படுத்த யாரும் இல்லாததால் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கை மீளப்பெற முடிவு செய்தேன்.

ரஞ்சனுக்கு மன்னிப்பு வழங்கி, அரசியல் பழிவாங்கலை தொடராமல் விடுவதன் மூலம் நாட்டுக்கு ஒரு முன்மாதிரியை எடுத்துக்காட்ட ரஞ்சன் ராமநாயக்க மீதான வழக்கை மீளப் பெற முடிவு செய்தேன். - என்றார். (கு-இ)

# 12ஆம் ஆண்டு நினைவுதினம்



| உதயம் | மறைவு |
|---|---|
| 24 . 06 . 1977 | 01 . 04 . 2009 |

**செல்வி. சுப்பிரமணியம் வசந்தமாலா**

(கிளி/விவேகானந்தா வித்தியாலயம்)

ஆண்டு பன்னிரண்டு - ஆனாலும்
ஆறாது உன் நினைவு
ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சங்கத்தானை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்

**வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.**

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2021**

01. **தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

02. நிதி அமைச்சின் பொது நிதி திணைக்கள சுற்றுநிருபம் 04/2016(III) படி தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சிடா (ICTAD/CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி (தொலைபேசி: 024 -2053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2021.04.01 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை** கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான **ஆங்கில மொழியிலான** கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** எனும் அலுவலகத்திலிருந்து 2021.04.01 ஆம் திகதியிலிருந்து 2021.04.15 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/ **(வரிநீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** எனும் முகவரிக்கு 2021.04.15 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 **நாட்கள்** (அறுபத்து மூன்று நாட்கள்) 2021.06.17 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| **PSDG/VU/VNPS /W/01/2021** | Mettaling & Tarring work at Thuvaranery Anantharpuliyankulam Road (0.26km) | **4.30** | 3மாதம் | C7 & C8 | **43,000.00** | **2021.07.15** |
| **PSDG-Special /VU/VNPS/W/01/ 2021** | Nochchikkulam School Road (Gravel) (0.21km) | **3.04** | 3மாதம் | C7 & C8 | **31,000.00** | **2021.07.15** |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.04.08 ம் **திகதி** 14..30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி,**
**2021.04.01**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரன் மணிமேகலை

(ஓய்வு பெற்ற Practice Nurse Jaffna, Kuwait,London. Health Advocate Newham General Hospital. Counselor NAAS)



நெடுந்தீவை பிறப்பிடமாகவும் லண்டன் கிளேஹோலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரன் மணிமேகலை (ஓய்வு பெற்ற Practice Nurse Jaffna, Kuwait,London. Health Advocate Newham General Hospital. Counselor NAAS) 30/03/2021 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் கந்தையா - கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை கதிரேசு - தையல்நாயகி கதிரேசு தம்பதிகளின் (நயினாதீவு) அன்பு மருமகளும். திரு. கதிரேசு நாகேஸ்வரன் ( Station Superstores, East Ham, London ) அவர்களின் அன்பு மனைவியும். Dr சத்திஜி. Dr சாய்ஜி. Dr வைதேகியின் அன்புத்தாயும். மஹ்பூபா. அலெக்ஸ் ஆகியோரின் அன்பு மாமியும். பாலசிங்கம் சிவபாக்கியம். சுந்தரலிங்கம் சரஸ்வதி. கந்தையா சிவபாதம். கனகரத்தினம் சரோஜாதேவி. நாகதேவன் புஷ்பராணி. தர்மலிங்கம் சந்திரவதனி. கந்தையா பராசக்தி. கந்தையா வசந்தகுமார். கந்தையா தவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். விஜயரட்ணம் ராஜராஜேஸ்வரி. கதிரேசு செல்வராஜன். திருமங்கை மோகனதாஸ். கதிரேசு நித்தியானந்தராஜா. கதிரேசு பேரின்பநாதன். காலஞ்சென்ற பாலசிங்கம். காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கனகரத்தினம். நாகதேவன். தர்மலிங்கம். விஜயரட்ணம். உமாதேவி. குமுதினி. தேவாம்பிகை. சிவபாதம் லீலாவதி. வசந்தகுமார் நிரஞ்ஜனி. தவபாதம் சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனியும். சாரங்கன் காயத்ரி. சுகேன். கஜேன். சஹானா. மீரா. மதுஷன். கஜனி. சாய்ராம். நிவேதன். நித்திலா. பாமினி. துஷ்யந்தி. தமயந்தி. தமிழ்மாறன்.பன்னீர்செல்வன். காலஞ்சென்ற குமுதினி மற்றும் சாந்தினி. குருதர்ஷன். பிரியதர்ஷன். றோய் றொபின்சன். சதீஷ்காந். சன்ஜீவ்காந். கார்திகா. சுரேஷ். ஹேமாஜினி. ஷியாம் ஷங்கர். குருதர்ஷினி. ஹேமதர்ஷனி. தயாநிதி. சுரம்யா. ரிஷிபன். பகவான். தஷான். கீரன். ஆகியோரின் மாமியும். பெரியம்மாவும் அன்ரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலண்டனில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**

**சகோதரர்கள் / சகோதரிகள்**

**க. தவபாதம் (லண்டன்** - 0044 739 303 0201)
**நா. புஸ்பராணி** - 077 696 7461
**க. சரோஜாதேவி** - 024 222 2289
**க. சிவபாதம்** - 077 575 7411
**ம. கிறோஜன் பெறாமகன்** - 076 668 8514

## லொத்தர் சீட்டிழுப்பில் ஐவருக்கு காசோலைகள்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 'சுப்பர்போல்' மற்றும் ராசி அதிஷ்டம்' சீட்டிழுப்பின் வெற்றியாளர்கள் ஐவருக்கு, பிரதமரின் செயலாளர் காமினி செனரத்வவால் காசோலைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. கெகிராவ, ஹிங்குராணவ, கடவத்த மற்றும் கண்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வெற்றி யாளர்கள் காசோலைகளைப் பெற்றுக் கொண்டனர். இவர்களில் ஹெகிராவ பிரதேசத்தைச் சேர்ந்த கே.ஜி.ரொஷான் என்பவர் சுப்பர்போல்' சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகையாக 7 கோடியே 54 லட்சத்து 12 ஆயிரத்து 110 ரூபாவைப் பெற்றுள்ளார்.

(க-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ஆறுமுகம் தங்கராஜா

[பவி]

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 . 08 . 1947 | 11 . 04 . 2020 |

நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம்
- உங்கள்
பழைய ஞாபகங்களை எங்களுக்கு
நகைச்சுவையுடன் பகிர்ந்திடுவீர்கள்

எங்களை கண்டதும் ஆசையாய் ஒடிவந்து
அணைத்திடுவீர்கள்
உங்கள் ஆசீர்வாதம் இருக்கட்டும்
எங்கள் வாழ்க்கை முழுவதும்.

பார்த்தீபன் தங்கராஜா
*Brampton*
*Canada.*

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு 24 - 09 - 1927

இறப்பு 11 - 04 - 2020

அமரர்

## இராசையா சிவபாக்கியம்

திதி : அபரபக்க சங்கடகர சதுர்த்தி

01.04.2021

எமது குடும்பத்தின் அணையாத தீபமாக நின்று எமது குடும்பத்தை வழிநடத்திய அன்புத் தெய்வம் எம்மை பிரிந்து வருடம் ஒன்று சென்றுவிட்டது. உங்கள் நினைவுகள் என்றும் அழியாது உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு,
கதிரமலை வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
021 224 0149


## விற்பனைக்கு

GV இலக்கமுடைய CD125 Benly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

077 447 1122, 077 033 4615

## சாரதி தேவை

பகுதி நேரமாக பணியாற்றக்கூடிய கார் சாரதி தேவை. அரச பணியிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும்

அக்ஷதை உணவகம்
நாக விகாரை முன்பாக
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ் நகரை அண்டிய பிரதேசத்தில் சேவிஸ் நிலையம் அமைக்க காணி வாடகைக்குத்தேவை

076 678 7288, 077 759 0427


# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18 . 03 . 1937

இறப்பு 01 . 04 . 2010

## திருமதி மேரியோசவின் பாக்கியநாதர்

"உம் இறக்கைகளின் நிழலில்
மகிழ்ந்து பாடுகிறேன்." தி.பா.63.7

அன்புடன் நினைவு கூரும்

அ.பாக்கியநாதர் - கணவன்
றெஜி - மகன் - நிஜிதா - மருமகள் - மேரிறியாங்கி - பேர்த்தி
றொகான் - மகன் - வதனா - மருமகள்
ஜெறோம் - பேரன்
றதீஸ்குமார் - மகன் - தயாளினி - மருமகள்
ஆன்செறன் - பேரன், ஆன் ஷிரோனி - பேர்த்தி
மற்றும் உறவினர்கள் அன்பர்கள்

'மரியன்ஸ்',
கல்லூரி வீதி,
மானிப்பாய்.
077 635 9240

# மரண அறிவித்தல்



## பராசக்தி சிவசண்முகம்

யாழ்.கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பராசக்தி சிவசண்முகம் அவர்கள் 24.03.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், பத்மினி (பப்பி-நோர்வே), ஜெனித்தா (பவா- இலங்கை வங்கி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கந்தையா சதாசிவம் (விதானையார்) பரமேஸ்வரி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி யோகராசா, K.S.மகேசன் (நீதவான்), அகிலேஸ்வரி சிவநேசன், ரகுநாதன், மற்றும் சோமாவதி அம்பலம், சிவதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற யோகராசா, சிவனேசன், சிவனேஸ்வரி மற்றும் ஆனந்த மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், இராஜன் செல்லையாவின் மாமியாரும், நிலவன், வெண்ணிலா, எழில்நிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கச்சாய் வீதி, கொடிகாமத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டைமறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பத்மினி (மகள்) 0094 77 083 7765
ஜெனித்தா (மகள்) 0094 77 458 8701
இராஜன் செல்லையா (மருமகன்) 0047 408 58566

# மரண அறிவித்தல்



பிறப்பு 31 . 12 . 1960

இறப்பு 31 . 03 . 2021

## திருமதி சந்திரவதனா முருகதாஸ்

செட்டிச்சோலை அளவெட்டி வடக்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரவதனா முருகதாஸ் நேற்று (31.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கண்ணம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லையா - அழகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், முருகதாஸ் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், மகிழன், கிறிஸ்ணா ஆகியோரின் பாசமிகு தாயும், செந்தில்வாசன், செல்வநேசன், விமலயோகி, காலஞ்சென்ற பார்த்தீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மநாதன், கெங்காதரன், வரதன், காலஞ்சென்ற ஸ்ரீ சிவதாஸ், நிற்குணம், வசந்தினி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
077 919 4134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழின்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்குள் திடீரென தொற்று அதிகரித்ததை அடுத்து பெருமளவானவர்களிடம் இருந்து மாதிரிகளைப் பெற்றுப் பரிசோதித்தோம். கொரோனாப் பரம்பலின் தீவிரத்தன்மையை ஆராய்வதற்காகத்தான் இவ்வாறு பெருமளவானவர்களிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டன.
தற்போதைய நிலவரப்படி கொரோனாவைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் தான் உள்ளோம். பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் இரண்டு வாரங்களின் பின்னர் மீண்டும் மாதிரிகளைப் பெற்று மீண்டும் சோதனைக்கு உட்படுத்துவோம். அதில் தொற்று அற்றவர்களாக இனங்காணப்படுபவர்கள் கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். கொரோனாத் தொற்றாளர்களாக எவராவது அடையாளம்காணப்பட்டால்அவர்கள்தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கும் சிகிச்சைக்கும் உட்படுத்தப்படுவர் என்றார். (ம-26,20)

## மருதனார்மடம்...

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள், ஒருவர் மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரி. எழுமாற்று அடிப்படையில் அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால் அவருடன் தொடர்புடைய நபர்கள் தற்போது அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-26)

## தேவையற்ற....

வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 329 போர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ். மாவட்டத்தில் ஒரு சில நாள்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, வரப்போகும் பண்டிகைக் காலங்களில் தேவையற்ற ஒன்று கூடல்களை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இது கொரோனாவைக் கட்டுப்படுத்தும் எமது நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் - என்றார். (ம-20)

## 46 கிலோ...

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.பொ.ப.சோம யித், உ.பொ.ப. விவேகானந் தலைமையிலான அணியினரே மேற்படி கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர். (ம-213,56)

## ஜேர்மனியிலிருந்து...

யாளர்களை, இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அங்கு தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
அந்த நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் மற்றும் ஏனைய போராட்ட அமைப்புகளைச் சேர்ந்த பலரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இலங்கையின் பாதுகாப்புப் படையினரால், இவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் என்று அறிக்கைகள் தெரிவித்துள்ள போதிலும், 31 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.
அத்துடன் புகலிடம் கோரியவர்களின் அகதி விண்ணப்பங்களின் மீள் பரிசீலனை அடிப்படையில், கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் இறுதி நேரத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (க-இ)

## தேவாலயங்கள்...

டுள்ளன. உயிர்த்த ஞாயிறு தினம் எதிர்வரும் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினத்தில் அசம்பாவிதங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் விசேட பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட வுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன நேற்றுத் தெரிவித்தார்.
முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை வாரம் முழுவதும் நடைமுறைப்படுத்தவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேநேரம், நேற்றுமுன்தினம் முதல் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-22)

## கொரோனாவால்...

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், நயினாதீவு ஆறாம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது. மனைவியின் முகத்தைப் பார்க்க முடியாத சோகத்தால் அவர் விரக்தியடைந்த நிலையில் காணப்பட்டார் என்று அவரின் உறவினர்கள் தெரிவித்தனர். நோய் காரணமாக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவரது மனைவி கடந்த 17ஆம் திகதி உயிரிழந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அவரின் சடலம் உறவினருக்கு காண்பிக்காமல் தகனம் செய்யப்பட்டது. இதனாலேயே கணவரான சோமசுந்தரம் விரக்தியில் காணப்பட்டார். கடந்த திங்கட்கிழமை அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

## அமெரிக்கர்களின்...

கைதான சந்தேகநபரின் தனியார் வங்கிக் கணக்கில் 13.4 மில்லியன் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை 'ஹக்' செய்த குழுவினர் வைப்பிலிட்டுள்ளனர். சந்தேகநபர் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஹக் குழுவினரின் உதவியுடன் நிதியைப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
கூட்டாளிகள் அமெரிக்க வங்கிக் கணக்குகளை ஹக் செய்து, யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரியில் உள்ள சந்தேகநபருக்கு பணத்தை மாற்றியுள்ளனர். இந்த மோசடியில் கைதான சாவகச்சேரியைச் சேர்ந்த சந்தேகநபருக்கு ஒரு பங்கு பணம் வழங்கப்படுகிறது.
மேலும் கடந்த ஏப்ரல் மாதம் முதல் மோசடிகளில் 140 மில்லியன் ரூபா உள்ளூர் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. பண மோசடி தொடர்பாக கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் 30 சந்தேகநபர்கள் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இவர்களில் வவுனியா மாவட்டத்தில் கடந்த மாதம் கைதுசெய்யப்பட்ட ஒருவரும் உள்ளடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

## வடக்கிலுள்ள...

இனி இங்கு நிகழத்தான் போகின்றன என்பதையும் மறைமுகமாகச் சொல்கின்றார். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணை ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் சனிக்கிழமை, வவுனியா மாவட்டத்தின் கலாபோகஸ்வெள கிராமத்துக்கு வருகை தரவுள்ளார். இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். கோத்தாபய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது முதல் தான் ஒரு சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையில் இயங்குபவன் என்பதை சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வருகின்றார். அதன் ஓர் கட்டமே அவரின் வவுனியாவின் சிங்களக் கிராமத்துக்கான வருகை.
போரின் பின்னர், தமிழ் மக்களின் பரம்பரைக் காணிகளையும் பிடித்து உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றக் கிராமமே கலாபோகஸ்வெள.
போரால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எத்தனையோ தமிழ் கிராமங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில் அவை எவற்றுக்கும் செல்லாமல், சிங்களக் கிராமம் ஒன்றுக்கு கோத்தாபய செல்கின்றார். தமிழ் மக்களுடன் நல்லெண்ணத்தை வளர்ப்பது என்பது அவரது அகராதியில் கிடையவே கிடையாது. சிங்கள தமிழ் மக்களுடன் ஓர் உறவை ஏற்படுத்தும் சிந்தனையும் அவருக்குக் கிடையாது.
சிங்களக் குடியேற்றங்களை தமிழர் தாயகத்தில் ஊக்குவிப்பதற்கும், அவ்வாறு குடியேறியவர்களுக்கு அரசின் உதவி ஒத்தாசைகளை வழங்குவதுமே அவரது பயணத்தின் நோக்கமாக இருக்கின்றது. அவர் இதன் ஊடாக சிங்கள மக்களுக்கு சொல்லும் செய்தியும் அது தான். தமிழ் மக்கள் கோத்தாபய ராஜபக்சவிடம் இருந்து சிறு துரும்பும் எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்க்கவும் கூடாது என்பதுதான் அவரின் நோக்கம் என்றார். (ஒ.5)

## வீட்டுத்...

தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ். மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டுக்கான (இந்த வருடம்) வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கான தெரிவுகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இடம்பெற்று வருகின்றன. தெரிவுகளில் தமது பெயர் உள்ளடக்கப்படவில்லை எனப் பல முறைப்பாடுகள் வந்து சேர்கின்றன. குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. தற்போது வெளியிடப்படும் பட்டியல் இறுதிப்பட்டியல் அல்ல - என்றார். (ம-20)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் என 541 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டன. அவற்றில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.
அதன் பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வு கூடம் இரண்டிலும் 756 பேரின் மாதிரிகள் நேற்றுச் சோதிக்கப்பட்டன. அவற்றில் 25 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில், யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 321 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 8 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் திருநெல்வேலி பொதுச்சந்தை தொகுதியைச் சேர்ந்தவர். ஏனைய 3 பேரும் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள். சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்
உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவர் மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரி. ஏனைய ஒருவர் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவர்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 5 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்படவர்கள். மேலும் இருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்தவர்கள் - என்றார். (ம-26)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி விமல்ஷினி நிமல்ராஜ்
B.A (Hons) L. L. B Attorney At Law
(சட்டத்தரணி)

அறவழி மழலைகள் பூங்காவில் ஆரம்பக்கல்வி
வட இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் வரை
யாழ் பல்கலையில் பட்டப்படிப்பு சிறப்பு சித்தி
இலங்கை திறந்த பல்கலையில் சட்டமாணி
இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டத்தரணி

இலங்கை உயர் நீதிமன்றில் 30.03.2021 ல் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்று தந்தையின் கனவினை நனவாக்கிய பெருமை பெற்ற சாதனையாளர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று இனத்துக்கும் சமூகத்திற்கும் சேவை பல நல்கி பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்:
அறவழி போராட்ட குழு
உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்
சிங்கைநகர் உதயசூரியன் முன்னேற்ற மன்ற சனசமூக நிலையம்
சிங்கைநகர் விழிவெள்ளி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்.

Best Wishes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு எதிராகப் போராடிய 600 பேர் மியான்மரில் சுட்டுக்கொலை





**நைபிட்டோ, ஏப்ரல் 1**

**மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய 600 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.**

மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை ஆட்சியில் இருந்து அகற்றிய இராணுவம் அந்த நாட்டில் அவசரகாலச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதையடுத்து இராணுவத்துக்கு எதிராக மியான்மரில் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. மக்களை ஆயுத முனையால் அடக்கி வருகின்றது மியான்மர் இராணுவம். இராணுவத்துக்கு எதிராகப் போராடும் மக்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகின்றது.

இராணுவத்தின் அரக்கத்தனமான தாக்குதல்களால் இதுவரை 600 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இராணுவத்துக்கு எதிராக போராடுபவர்களைக் காணொலி எடுத்து அவர்களின் வீடுகளுக்குச் சென்று போராட்டக் காரர்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கையிலும் மியான்மர் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

'மியான்மரில் இடம்பெறும் அத்துமீறல்களை அவதானித்து வருகின்றோம். இதற்கு கனதியான விலையை மியான்மர் இராணுவம் கொடுக்கும்' என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. (ம)

**பெயர் மாற்றம்**

முதலிகோயில் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் வசிக்கும் திவ்யா ஜெகத் குருதாஸ் எனும் நான் என்னுடைய பெயரை டிவ்யா ஜெகத்குருதாஸ் என மாற்றியுள்ளேன்

**(NIC NO: 937843100V)**

**Jobsin.lk வேலைவாய்ப்புக்கள்**

**1.வங்கி உத்தியோகத்தர் 2.முகாமைத்துவ உதவியாளர் 3.** சாரதி இன்னும் பல வேலைவாய்ப்புக்கள் காணப் படுகின்றன. எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பதிவுகளுக்கு முந்துங்கள்.

**தொலைபேசி:076 092 8460** | **கோண்டாவில் ஐயப்பன் கோவிலடி, கோண்டாவில்.**

**காணி விற்பனைக்கு**

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு)
(தரகர் தேவையில்லை)
**077 814 7389**

## விலங்கு மூலமே வைரஸ் பரவியது ஆய்வுகூட கசிவுக்கு வாய்ப்பில்லை

*ஐ.நா. விசாரணைக் குழு அறிக்கை*

லண்டன், ஏப்ரல் 1

கொரோனா வைரஸின் மூலம் எது என்பது தொடர்பான ஐ.நா. சுகாதார நிறுவன விசாரணை அறிக்கை, மறுப்பு ஏதும் தெரிவிக்காத தரப்பான விலங்குகள் மீது மீண்டும் பழிபோட்டிருக்கிறது. இடைநிலை விலங்கு ஒன்றின் மூலமே வைரஸ் மனிதருக்குத் தொற்றியிருக்க வேண்டும். ஆய்வு கூடத்தில் இருந்து அது கசிந்திருப்பதற்கான வாய்ப்புகள் மிக மிக அரிது என்று உலக சுகாதார நிறுவனத்தின் வல்லுநர்கள் குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வௌவாலில் இருந்து அடையாளம் தெரியாத இடைநிலை விலங்கு ஒன்றின் மூலமே வைரஸ் மனிதர்களுக்குத் தொற்றியிருக்கலாம் என்று ஆரம்பம் முதல் அறிவியலாளர்கள் தெரிவித்து வந்த கருதுகோளையே தற்போது உலக சுகாதார நிறுவனமும் தனது முடிவாக அறிவித்துள்ளது.

எனினும் பண்ணை விலங்குகள், குளிரூட்டப்பட்ட இறைச்சி என்பவையும் தொற்றுக்கான காரணங்களாக இருக்கக் கூடும் என்ற கருதுகோள்களை நிராகரிக்க முடியாது எனத் தெரிவித்திருக்கின்ற உலக சுகாதார நிறுவனம், கிழக்கு ஆசியாவுக்கு வெளியே உள்ள விலங்கு உணவுகள் தொடர்பான அவதானத்தையும் புறந்தள்ளிவிட முடியாது எனக் கூறியுள்ளது. இவை தொடர்பாக பூகோள ரீதியான பரந்துபட்ட ஆய்வுகள் அவசியம் என்றும் பரிந்துரை செய்துள்ளது. (ம)

### வட்டுக்கோட்டையில்...

**நபர் ஒருவர் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இன்னொருவர் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.**

வட்டுக்கோட்டையில் உள்ள வீடொன்றில் போதைப்பொருள் உள்ளது என்று சாவகச்சேரி மதுவரித் திணைக்க ளத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மதுவரித் திணைக்களத்தின் சாவகச்சேரி நிலையப் பொறுப்பதிகாரி அசோகரட்ணத்தின் அறிவுறுத்தலில் மதுவரிப் பரிசோதகர் வசீகரனின் தலைமையில் மல்லாகம் மற்றும் பருத்தித்துறை மதுவரி நிலைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நேற்று மாலை முன்னெடுத்த சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த வீட்டில் இருந்து ஒரு கிலோகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. இருவர் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். பிரதான சந்தேக நபர், மற்றையவருக்கும் குறித்த பொதிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து மற்றையவர் விடுவிக்கப்பட்டார். சந்தேக நபர் எதிர்வரும் **14ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார்.** (ம-26)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



தோற்றம்
09 • 08 • 1946

மறைவு
02 • 03 • 2021

**அமரர் அரியரத்தினம் கந்தசாமி**

**(கந்தசாமி அன் சன்ஸ் உரிமையாளர்)**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார் உறவினர் நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
31 நாட்கள் மறைந்ததையா.

கடந்த 02.03.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் அரியரத்தினம் கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.04.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, பதாதைகள் மற்றும் மலர்வளையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சிற்றுண்டிகள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாளியாவத்தை, சங்கானை.
தொ.பே: 0773393372

கந்தசாமி அன் சன்ஸ்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.